تاميلي

# ஜனாஸாவின் சட்டங்கள்

## 70 கேள்வி பதில்


வழங்கியவர்

அஷ்ஷைக் முஹம்மத் பின் ஸாலிஹ் அல்உஸைமீன்

தமிழில்

மவ்லவி ரம்ஸான் பாரிஸ்


# 70 سؤالا في أحكام الجنائز


لفضيلة الشيخ محمد بن صالح العثيمين



مكتب الدعوة بالربوة

www.islamreligeon.com

معاً نحقق آمال الدعوة ...

# 70 سؤالا في أحكام الجنائز

لفضيلة الشيخ محمد بن صالح العثيمين

# ஜனாஸாவின் சட்டங்கள்

## 70 கேள்வி பதில்


வழங்கியவர்

அஷ்ஷைக் முஹம்மத் பின் ஸாலிஹ் அல்உஸைமீன்

தமிழில்

மவ்லவி ரம்ஸான் பாரிஸ்

ح المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالروضة ، ١٤٢٩هـ

فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر

العثيمين ، محمد بن صالح

٧٠ سؤالاً في أحكام الجنائز / محمد بن صالح العثيمين - الرياض : ١٤٢٩ هـ

٥٦ ص ؛ ١٢ × ١٧ سم

ردمك : ٤-٨-٩٥٣٩-٩٩٦٠-٩٧٨

(النص باللغة التاميلية)

١- الجنائز أ-العنوان

ديوي ٢٥٢,٩ ١٤٢٩/٢٢٧٣

رقم الايـداع : ١٤٢٩/٢٢٧٣

ردمك : ٤-٨-٩٥٣٩-٩٩٦٠-٩٧٨

# முகவுரை

## பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர்ரஹீம்

நாளாந்த வாழ்க்கையில் அவசியப்படும் மார்க்கச் சட்டங்களை அவற்றின் அடிப்படை ஊற்றுக்களான குர்ஆன், ஹதீஸ் ஒளியில் கற்று, செயல்படுவது முஸ்லிம்களின் பிரதான கடமைகளில் ஒன்றாகும். மரணம், மண்ணறை என்று நாள்தோறும் நாம் சந்தித்துவரும் நிகழ்வுடன் சம்பந்தப்படும் சட்டங்களை நம் சகோதரர்களில் அனேகமானோர் அறியாமல் இருப்பது கவலையான அம்சமே.

இஸ்லாமியர்களுக்கிடையில் காணப்படும் இவ்வறியாமையை போக்கும் வண்ணம் இப்புத்தகத்தை படித்து அவர்கள் பயன்பெற வேண்டுமெனும் ஆவலில் அறபு மூலத்திலிருந்து இதனை தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அஷ்ஷைக் முஹம்மத் பின் ஸாலிஹ் அல்உஸைமீன் எனும் மாபெரும் மார்க்க அறிஞரிடம் மரணம், மரணத்தின் பின் மேற்கொள்ளப்படும் விசயங்கள் பற்றி கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அன்னார் அளித்த விடைகளே இப்புத்தகத்தில் அமைந்துள்ளது.

அறபு மூலத்திலிருந்து இதனை தமிழில் மொழிமாற்றம் செய்யும் இப்பணியை செய்துமுடிக்க வாய்ப்பளித்த வல்ல நாயன் அல்லாஹ்விற்கே அனைத்து புகழும், நன்றியும்.

மேலும் இப்புத்தகத்தை மீளாய்வு செய்து வழங்கிய எனது அன்பிற்குரிய நண்பர்களான மவ்லவி ஏ ஹபீப், மவ்லவி ஏ. ஆர். அப்துர்ரஹ்மான் ஆகியோருக்கும் இலகுவான நடையில் இப்புத்தகம் வெளிவரும் வண்ணம் அனைத்து

ஒத்துழைப்புக்களையும் வழங்கிய சகோதரர் முபாரக் அவர்களுக்கும் ஏனைய அனைத்து உதவியாளர்களுக்கும் எனது மனமுவந்து நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

தமிழ் அறிந்தோர் இப்புத்தகத்தை படித்து பயன்பெற வேண்டுமென ஆவல் கொண்டு இதை அச்சிட்டு இலவசமாக வெளியிடும் சவுதி ரியாத் மாநகரத்தில் அமைந்துள்ள ரவ்ழா இஸ்லாமிய அழைப்பு, வழிகாட்டல் நிலையத்திற்கும் எனது மனமுவந்த நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

தவறுகள் இருப்பின் தகவல் தருமாறு வாசகர்களான உங்களை பணிவுடன் வேண்டுகிறேன். இப்புத்தகத்தில் காணப்படும் நிறைகளுக்கு கூலியும் குறைகளுக்கு மன்னிப்பும் வழங்குமாறு வல்லவன் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கிறேன்.

மொழிபெயர்ப்பாளர்
மவ்லவி ரமஸான் பாரிஸ்
**21/04/2008**

# ஜனாஸாவின் சட்டங்கள்

1. கேள்வி : மரணத்தருவாயில் இருப்பவரின் அருகில் இருப்பவர் செய்யவேண்டுடிய காரியங்கள் என்ன ? அருகில் இருப்பவர் சூரா யாஸீன் ஓத (வேண்டும் என்பதற்கு) ஹதீஸில் ஆதாரம் உண்டா?

பதில் : அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டு ஆரம்பம் செய்கிறேன். அகிலத்தின் இரட்சகன் அல்லாஹ்வுக்கே அனைத்துப் புகழும். முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் குடும்பத்தார், தோழர்கள் மீதும் சாந்தியும், சமாதானமும் உண்டாகட்டுமாக!

நோயுற்றிருப்பவரிடம் நோய் விசாரிக்கச் செல்வது ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமுக்கு செய்யவேண்டிய கடமைகளில் ஒன்றாகும். நோயாளியிடம் நோய் விசாரிக்கச் செல்பவர் பாவமன்னிப்பை பற்றியும், குடும்பத்தாருக்கு சொல்ல வேண்டிய போதனை பற்றியும், முழு நேரத்தையும் அல்லாஹ்வின் தியானத்தில் கழிப்பது பற்றியும் அவருக்கு ஞாபகமூட்டுவது அவசியமாகும். ஏனெனில் நோயுற்று இருப்பவர் இவ்வாறான போதனைகளின் பக்கம் தேவையுள்ளவராக இருப்பார். உண்மையில் அவர் மரண தருவாயை அடைந்துவிட்டதாக உறுதி ஏற்பட்டுவிட்டால் நபி (ஸல்) அவர்களின் கட்டளைக்கிணங்க "லாஇலாஹ இல்லல்லாஹ்" எனும் கலிமாவை அவருக்கு சொல்லிக் கொடுப்பது அவசியமாகும். ஆகவே அவருக்கு கேட்கும் வண்ணம் திக்ரு செய்ய வேண்டும். அப்போது அவருக்கு ஞாபகம் வரும், பிறகு அவரும் திக்ரு செய்வார்.

கலிமாவை கூறுமாறு அவரை வற்புறுத்தக்கூடாது, மன இறுக்கம், மரணத்தின் சிரமம் காரணமாக சிலவேளை அவர் லாஇலாஹ இல்லல்லாஹ் எனக் கூற மறுக்கலாம். ஆதனால் அவரின் இறுதி நிலை தீமையாக மாறிவிடும். எனவே செயல் ரீதியாகவே அவருக்கு ஞாபகப்படுத்தவேண்டும். ஞாபகப்படுத்திய பிறகு அவர் அதை கூறிவிட்டால் மௌனமாய் இருந்திட வேண்டும். அவரின் இறுதி வார்த்தை கலிமாவாக இருப்பதற்காக அதன் பிறகு வேறு ஒன்றும் அவரிடம் பேசக்கூடாது. வேறு ஏதும் அவராக பேசினால் கலிமாவே அவரின் இறுதி வார்த்தையாக அமையும் பொருட்டு மீண்டும் இரண்டாம் முறையும் அதை அவருக்கு சொல்லிக்கொடுக்க வேண்டும்.

மரணத்தருவாயில் இருப்பவரிடம் சூரா யாஸீன் ஓதுவது சுன்னத்தான காரியமென்பது அனேக அறிஞர்களின் கருத்தாகும். உங்களில் மரணத்தருவாயில் இருப்பவரிடம் சூரா யாஸீன் ஓதுங்கள் எனும் ஹதீஸை அவர்கள் இதற்கு சான்றாக கூறுகின்றனர். ஆயினும் இந்த ஹதீஸ் பற்றி வேறு சில அறிஞர்கள் பலவீனமானது எனக் கூறியுள்ளனர். ஆகவே அதை சரியெனக் கருதுவோர் மரணத்தருவாயில் இருப்பவரிடம் சூரா யாஸீன் ஓதுவது சுன்னா என்றும், பலவீனம் எனக் கருதுவோர் சுன்னா இல்லை என்றும் கூறுகின்றனர். (இந்த ஹதீஸ் பலவீனம் என்பதே சரியான கருத்து. காரணம் இதன் அறிவிப்பாளர் வரிசையில் அறிமுகமற்ற இருவர் இடம் பெற்றுள்ளனர். இமாம் நவவி அவர்கள் மஜ்மூஃ எனும் நூலில் இதனை தெளிவுபடுத்தியுள்ளார். —மொழிபெயப்பாளர்-)

2. கேள்வி : ஒருவரின் மரணச் செய்தியை அவரின் ஜனாஸாத் தொழுகையில் கலந்துக்கொள்வதற்கென

குடும்பத்தினர், நண்பர்கள் ஆகியோருக்கு அறிவிப்பது கூடுமா?

பதில் : இவ்விதம் மரணச் செய்தி அறிவிப்பது அனுமதிக்கப்பட்டுள்ளது. நஜ்ஜாஷி (எனும் மன்னர்) மரணித்த அன்று நபி (ஸல்) அவரின் மரணச் செய்தியை அறிவித்தார்கள். மேலும் பள்ளிவாயிலை கூட்டி தூய்மைப் படுத்தும் பெண்மணி மரணித்து, நபியவர்களிடம் கூறாமலேயே நபித் தோழர்கள் அவளை அடக்கம் செய்துவிட்டபோது நீங்கள் எனக்கு அறிவித்திருக்கக்கூடாதா? என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆகவே ஒருவரின் ஜனாஸாத் தொழுகையை அதிகமானோர் தொழுவதற்காக மரணச் செய்தியை அறிவிப்பது குற்றமல்ல. ஏனெனில் இவ்வாறான காரியத்திற்கு ஹதீஸில் ஆதாரம் உள்ளது. அவ்வாறின்றி அடக்கிய பிறகு ஒருவரின் மரணச் செய்தியை அறிவிப்பு செய்வது மார்க்கமல்ல.

3. கேள்வி : இறந்தவரை குளிப்பாட்டும் முறை என்ன? மார்க்கத்தைக் கற்கும் மாணவர்கள் மரணித்தவர்களை குளிப்பாட்டும் பொறுப்பை ஏற்றால் நன்றாயிருக்கும். இது பற்றி அவர்களுக்கு நீர் கூறும் உபதேசம் என்ன?

பதில் : மரணித்தவரை குளிப்பாட்டும் முறை யாதெனில் யாரும் பார்க்க முடியாதபடி மறைவான இடத்தில் அவ்வுடலை வைக்கவேண்டும். குளிப்பாட்டுபவர் அவரின் உதவியாளர் ஆகிய இருவர் மாத்திரமே அங்கு இருக்க வேண்டும். பிறகு குளிப்பட்டுபவர் உட்பட வேறு எவருமே காணாதவாறு இறந்தவரின் மர்மஸ்தானத்தை சிறிய துணியால் மூடி, அவரின் மேலுள்ள ஆடைகளை நீக்க வேண்டும். பிறகு உடலை சுத்தம் செய்து தொழுகைக்கு

வுழு செய்வது போன்று வுழு செய்துவிட வேண்டும். வாயிற்கும், மூக்கிற்கும் தண்ணீர் செலுத்தாது ஒரு துணியை நனைத்து அதன் மூலம் இறந்தவரின் பற்களையும், மூக்கின் உட்பகுதிகளை தேய்த்து விடவேண்டும் என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

இதற்கு பிறகு இறந்தவரின் தலை மற்றும் உடலின் வலது பகுதியிலிருந்து கழுவ ஆரம்பிக்கவேண்டும். இலந்தை இலை சுத்தப்படுத்தக்கூடியது ஆகவே அவசியம் தண்ணீருடன் அதை கலக்கவேண்டும். அதன் நுரையினால் தாடி, தலை ஆகியவற்றை கழுவ வேண்டும். இறுதி முறையாக கற்பூரத்தை கலந்து கழுவ வேண்டும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் அன்னாரின் மகளை குளிப்பாட்டிய பெண்களிடம் இறுதியாக கழுவும் போது கற்பூரத்தை கலந்து கழுவுமாறு கூறினார்கள். (நூல் : முஸ்லிம்) பிறகு அவ்வுடலை துடைத்து க∴பனில் வைக்கவேண்டும்.

இறந்தவரை குளிப்பாட்டுவது ∴பர்ழ் கி∴பாயா வகையை சார்ந்த கடமையாகும். ஆகவே சிலர் இக்கடமையை நிறைவேற்றுவதன் மூலம் ஏனையோரின் கடமை நீங்கிவிடும். மார்க்கம் கூறுகின்ற முறையில் கழுவத்தெரிந்தோர் மரணித்தோரை குளிப்பாட்டும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதே எனது அபிப்பிராயம். மார்க்கத்தை கற்கும் மாணவர்களே இக்காரியத்தை செய்ய வேண்டுமென்பதில்லை. அவர்களுக்கு இதைவிட முக்கிய வேலைகள் இருக்கலாம். ஆகவே மரணித்தவரை குளிப்பாட்டும் வேலையில் பொறுப்பு வாய்ந்த ஒரு குழுவினர் ஈடுபட்டால் போதும். தாம் செய்யும் காரியத்தில் தெளிவுள்ளவர்களாக இருக்கும் பொருட்டு, மரணித்தவரை எவ்வாறு குளிப்பாட்டி க∴பனிடுவது எனும் அறிவு

அவர்களுக்கு போதிக்கப்பட்டால் போதுமானதாகும். அல்லாஹ்வே யாவற்றையும் மிக அறிந்தவன்.

4. கேள்வி : மரணித்தவருக்காக தொழும் முறை யாது ?

பதில்: ஜனாஸாவிற்கான தொழுகை முறை யாதெனில், தொழுபவருக்கு முன்னால் மரணித்தவரை வைக்கவேண்டும். மரணித்தவர் ஆணாயின் தலைக்கு நேராகவும் பெண்ணாயின் இடுப்புக்கு நேராகவும் தொழுவிப்பவர் நிற்கவேண்டும். பிறகு முதல் தக்பீரை கூறி அதில் சூரா ஃபாத்திஹாவை ஓதவேண்டும். பிறகு இரண்டாம் தக்பீரை கூறி அதில் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து கூறவேண்டும். பிறகு மூன்றாவது தக்பீரை கூறி அதில் மரணித்தவருக்காக துஆ செய்யவேண்டும். துஆ கேட்கும் போது முதலில்

اللَّهُمَّ اغْفِرْ لِحَيِّنَا وَمَيِّتِنَا وَصَغِيرِنَا وَكَبِيرِنَا........

அல்லாஹும்ம‌ஹ்ஃபிர் லிஹய்யினா வமய்யிதினா வஸகீரினா, வகபீரினா என்று ஆரம்பிக்கும் பொதுவான துஆவையும் பிறகு இறந்தவருக்கென ஓதவேண்டிய குறிப்பான துஆவையும் நபி (ஸல்) அவர்கள் கற்றுத்தந்தபடி ஓதவேண்டும். இந்த துஆக்களை அறியாதவர் தனக்கு அவ்வேளையில் ஞாபகமுள்ள எந்த துஆவைக் கொண்டும் பிரார்த்தனை செய்யலாம். இறந்தவருக்காக பிரார்த்தனை செய்வதே நோக்கமாகும், ஏனெனில் பிறரின் பிரார்த்தனை தேவையானராக அவர் இருக்கின்றார். பிறகு நான்காவது தக்பீரை கூறி , சற்று தாமதித்த பிறகு ஸலாம் கூற வேண்டும்.

நான்காவது தக்பீருக்கு பிறகு ரப்பனா ஆதினா ஃபித் துன்யா ஹஸனதன் வஃபில் ஆகிரதி ஹஸனஃ, வகினா அதாபன்னார் எனும் துஆவை கூற வேண்டும் என சில அறிஞர்கள் கூறுகின்றனர்.

ஐந்தாம் முறையாகவும் தக்பீர் கூறுவது குற்றமில்லை. அதுவும் நபிவழி என்பதனால் மக்களுக்கு இந்த சுன்னா மறைந்துவிடாமல் இருக்கும் பொருட்டு சிலவேளை களிலாவது இவ்வாறு செய்துக் காட்டுவது அவசியமாகும். இந்த தக்பீருக்கு பிறகு கூறுவதற்கென்று ஏதும் வந்துள்ளதாக நான் அறியவில்லை, எனினும் ஐந்தாம் முறை தக்பீர் கூற நினைத்துள்ளவர் நான்காம், ஐந்தாம் தக்பீர்களில் ஓதவென துஆவை பங்கு வைத்து ஓதிக்கொள்ளட்டும். அல்லாஹ்வே யாவற்றையும் மிக அறிந்தவன்.

5. கேள்வி : மரணித்தவரை குளிப்பாட்டி, கஃபன் செய்து, தொழுகை நடாத்தி, அடக்கம் செய்வதை உறவினர்களின் வருகைக்காக பிற்படுத்துவதன் சட்டம் என்ன? இக்காரியங்களை நிறைவேற்றுவதற்கென கால வரையறை ஏதும் உண்டா?

பதில் : மரணித்தவரை அடக்கம் செய்வதற்கான ஏற்பாட்டை பிற்படுத்துவது நபிவழிக்கு முரணான செயலாகவும், நபி (ஸல்) அவர்களின் பின்வரும் கட்டளைக்கு மாற்றமான அம்சமாகவும் உள்ளது. "ஜனாஸாவை வேகமாக எடுத்துச் செல்லுங்கள், அது நல்ல ஜனாஸாவாக இருப்பின் நீங்கள் அதை நலவின் பக்கம் கொண்டு செல்கிறீர்கள், இல்லாவிட்டால் உங்கள் புஜங்களிலிருந்து நீங்கள் இறக்கி வைக்கப் போகும் கேடாகும் அது என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

எவருக்காகவும் அடக்கம் செய்வதை பிற்படுத்தக் கூடாது ஓரிரு மணித்தியாலங்கள் போன்று சிறிதளவு காலம் தாமதிப்பது குற்றமல்ல. நீண்ட நேரம் வரை அடக்கம் செய்வதை பிற்படுத்துவது மய்யித்திற்கு செய்யும்

குற்றமாகும். நல்ல மனிதரை அடக்குவதற்காக உறவினர் எடுத்துச் செல்லும் போது வேகமாக செல்லுங்கள், வேகமாக செல்லுங்கள் என்று அந்த மய்யித்தே கூறுகின்றது. நலவையும், அதிக நன்மையையும் அதற்கு வாக்களிக்கப்பட்டிருப்பதே இதற்கு காரணமாகும். அல்லாஹ்வே யாவற்றையும் மிக அறிந்தவன்.

6. கேள்வி : வேறு இடங்களில் இறந்து அடக்கம் செய்யப்பட்ட ஜனாஸாவிற்கு தொழுகை நடாத்துவதை எப்பொழுதுமே மார்க்கம் அனுமதிக்கின்றதா?

பதில் : வெளியூரில் இறந்தவர்களில் எவருக்காக தொழுகை நடாத்தப்படவில்லையோ அவரைத் தவிர வேறு எவருக்கும் (ஜனாஸா இல்லாத நிலையில்) ஜனாஸாத் தொழுகை நடாத்துவதை மார்க்கம் அனுமதிக்கவில்லை என்பதே அறிஞர்களின் கருத்துக்களில் ஏற்றமானதாக உள்ளது. முஸ்லிமல்லாதோர் வாழுகின்ற நாட்டில் மரணித்த ஒருவருக்கு எவருமே தொழவில்லையாயின், அவசியம் அவருக்காக தொழவேண்டும். அவ்வாறின்றி எவருக்கு தொழுகை நடாத்தப்பட்டதோ அவருக்காக வேறுபல இடங்களில் ஜனாஸா தொழுகை நடாத்துவது மார்க்கத்தில் இல்லை என்பதே சரியாகும். நஜ்ஜாஷி மன்னரின் சம்பவத்தை தவிர நபிவழியில் இதற்கு ஆதாரம் இல்லை என்பதே இதற்கான காரணம். நஜ்ஜாஷி மன்னருக்கு அவரின் ஊரில் தொழுகை நடைபெறவில்லை. ஆகவே நபி (ஸல்) மதீனாவில் அவருக்காக தொழுதார்கள். பெரியோர்கள், தலைவர்கள் இறந்ததற்காக நபி (ஸல்) அவர்கள் தொழுததாக எந்த செய்தியும் அறிவிக்கப்படவில்லை.

எவரின் பணம், அறிவு ஆகியன மார்க்கத்திற்கு பயனுள்ளதாக அமைந்ததோ, அந்த மனிதனுக்காக மறைவான ஜனாஸாத் தொழுகை நடாத்த முடியும் இல்லாவிட்டால் நடாத்தக்கூடாது என்று சில அறிஞர்களும், பொதுவாகவே அனைவர்களுக்கும் வேறு இடங்களில் ஜனாஸாத் தொழுகை நடாத்த முடியும் என்று வேறு சில அறிஞர்களும் கூறியுள்ளனர். ஆயினும் இக்கருத்து மிக பலவீனமானதாகும்.

7. கேள்வி : இறந்தவருக்காக தொழுகை நடாத்த தகுதியானவர் இமாமா? அல்லது இறந்தவரின் உறவினரா?

பதில் : இறந்தவருக்காக பள்ளிவாயிலில் தொழுவிக்கப்பட்டால் பள்ளியின் இமாமாக உள்ளவரே தொழுவிக்க தகுதியானவராவார். ஏனெனில் "ஒருவரின் அதிகாரத்திற்குட்பட்ட இடத்தில் வேறொருவர் தொழுவிக்க வேண்டாம்" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். பள்ளிவாயிலல்லாத வேறொரு இடத்தில் தொழுவிக்கப்பட்டால் மரணித்தவரால் நியமிக்கப்பட்டவர் தகுதியானவர் ஆவார். அப்படி எவரும் நியமிக்கப்படாவிட்டால் மரணித்தவரின் நெருங்கிய உறவினர்களில் ஒருவர் தொழுவிப்பதே சிறந்ததாகும்.

8. கேள்வி : பல ஜனாஸாக்கள் இருக்கும் போது அவைகள் அனைத்தையும் இமாமிற்கு முன் சமமாக வைக்கவேண்டுமா? அல்லது அறிஞர்களின் ஜனாஸாவை முன்னால் வைக்கவேண்டுமா?

பதில் : ஆண்களின் ஜனாஸாவை பெண்களின் ஜனாஸாவை விட முற்படுத்தி வைக்கவேண்டும். சிறுவனின்

ஜனாஸாவையும் பெண்ணின் ஜனாஸாவை விட முற்படுத்தியே வைக்கவேண்டும்.

ஒரு ஆண், ஒரு சிறுவன், ஒரு பெண், ஒரு சிறுமி என்ற அடிப்படையில் நான்கு ஜனாஸாக்கள் எம்மிடம் இருந்தால், (இமாமுக்கு முன்னால்) முதலில் ஆணின் ஜனாஸா, பிறகு சிறுவனின் ஜனாஸா, பிறகு பெண்ணின் ஜனாஸா, பிறகு சிறுமியின் ஜனாஸா என்ற வரிசைப் பிரகாரமே அந்த ஜனாஸாக்கள் வைக்கப்படவேண்டும். அனைத்து ஜனாஸாக்களும் ஆண்களாகவே இருந்தால் இமாமிற்கு அருகில் அவர்களில் கற்ற அறிஞரின் ஜனாஸாவை வைக்கவேண்டும். உஹத் போரில் ஷஹீதானோர்களை ஒரே கப்ரில் அடக்கம் செய்தபோது அல்குர்ஆனை அதிகம் மனனமிட்டவரின் ஜனாஸாவை குழியில் முதலில் வைக்குமாறு நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள். அறிஞரின் ஜனாஸாவையே இமாமிற்கு அருகில் வைக்கவேண்டுமென்பதை இந்நிகழ்ச்சி அறிவிக்கின்றது.

9. கேள்வி : ஜனாஸா தொழுகையில் இமாம் நிற்கவேண்டிய இடம் எது?

பதில் : மரணித்தவர் ஆணாயின் தலைக்கு நேராகவும், பெண்ணாயின் நடு உடலுக்கு நேராகவும் இமாம் நிற்கவேண்டும். சிறுவன், சிறுமி ஆகியோருக்கும் இதே சட்டம் தான்.

10. கேள்வி : பல ஜனாஸாக்களுக்காக தொழுகை நடத்தப்படும்போது, ஆண் ஜனாஸா, பெண் ஜனாஸா என்று அறிவிப்பு செய்வதன் சட்டம் என்ன?

பதில் : ஆண் மய்யித்திற்கு ஆண்பாலிலும், பெண் மய்யித்திற்கு பெண்பாலிலும் தொழுவோர் துஆ செய்யும் பொருட்டு அவ்வாறு அறிவிப்பு செய்வதில் குற்றம் இல்லை. அறிவிப்பு செய்யாவிட்டாலும் குற்றம் இல்லை. என்ன ஜனாஸா என்பதை அறியாதவர் தனக்கு முன்னால் இருக்கும் இந்த ஜனாஸாவிற்கு தொழுகிறேன் என நினைத்தால் போதுமாகும், அவர்களின் தொழுகை நிறைவேறும்.

11. கேள்வி : வெள்ளிக்கிழமை தினங்களில் பல ஜனாஸாக்கள் வருவதால் ஒரே தடவையில் தொழுகை நடாத்த இடம் போதாமல் உள்ளது. இந்நிலையில் அனைத்தையும் ஒன்றன்பின் ஒன்றாக வைத்து (ஒரே தடவையில்) தொழவேண்டுமா? அல்லது பல முறைகள் தொழலாமா?

பதில் : இமாமிற்கு முன்னால் ஒரு ஜனாஸாவிற்கு பின் மற்ற ஜனாஸாவை வைத்து எல்லோருக்குமாக (ஒரே தடவையில்) தொழவைக்கவேண்டும். இமாம் அவைகளுக்கு பின்னாலும் ஏனையோர் இமாமுக்கு பின் நெருக்கமாக பல வரிசைகளில் நின்று தொழமுடியும். காரணம் இத்தொழுகையில் ருகூஃ, சுஜூத் செய்யும் தேவை அவர்களுக்கு இல்லை.

12. கேள்வி : ஜனாஸா தொழுகையை நிறைவேற்றுபவர்கள் அதிகமாக இருக்கவேண்டுமென ஹதீஸ் ஏதும் வந்துள்ளதா? அதற்கான காரணம் என்ன?

பதில் : ஆம். நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்: "ஒரு முஸ்லிமானவர் மரணிக்க,

அல்லாஹ்விற்கு எந்த ஒன்றையும் இணையாக்காத நாற்பது மனிதர்கள் தொழுதால் மரணித்த அந்த மனிதருக்காக அவர்கள் கேட்கும் மன்னிப்பை நிச்சயம் அல்லாஹ் ஒப்புக் கொள்வான்."

13. கேள்வி : ஜனாஸாத் தொழுகையில் ஃபாத்திஹா சூரா ஓதிய பிறகு வேறு வசனம் ஏதும் ஓதுவதன் சட்டம் என்ன?

பதில் : ஃபாத்திஹா சூரா ஓதிய பிறகு அல்குர்ஆனில் எதையேனும் ஓதுவது குற்றம் இல்லை. ஆனால் நீட்டக்கூடாது. ஃபாத்திஹாவை மாத்திரம் ஓதினாலும் போதுமானதாகும். காரணம் ஜனாஸாத் தொழுகை இலகுவாக அமைக்கப்பட்ட ஒரு தொழுகை முறை. ஆகவேதான் அதில் ஆரம்ப பிரார்த்தனைக் கூட கிடையாது. அஊது கூறி, ஃபாத்திஹா ஓதுவது மாத்திரமே உள்ளது.

14. கேள்வி : ஜனாஸா தொழுகையில் சிறு குழந்தைக்காக துஆ ஓதும் முறை என்ன?

பதில் : பொதுவான துஆவை ஓதிய பிறகு சிறு குழந்தைக்காக பின்வரும் முறையில் துஆ செய்ய வேண்டுமென அறிஞர்கள் கூறுகின்றனர்: அல்லாஹு ம் மஜ்இல்ஹு ஃபரதன் லிவாலிதய்ஹி வதுக்ரன் வஷஃபீஅன், முஜாபா, அல்லாஹு ம்ம ஸக்கில் பிஹீ மவாஸீனஹு மா வஅஃழிம் பிஹீ உஜூ ரஹு மா, வஅல்ஹிக்ஹு பிஸாலிஹி ஸலஃபில் முஹ்மினீன், வஜ்அல்ஹு ஃபீ கஃபாலதி இப்றாஹீம், வகிஹீ பிரஹ்மதிக அதாபல் ஜஹீம்.

மேற்கூறப்பட்ட இந்த துஆவையோ, அல்லது தனக்கு ஞாபகத்திலுள்ள எந்த ஒரு துஆவையோ கேட்க முடியும்.

இதற்கு ஆதாரமாக சரியான ஹதீஸ் ஏதும் இல்லை. ஆகவே விரும்பிய பிரார்த்தனையை கேட்கலாம்.

15. கேள்வி : ஜனாஸாத் தொழுகையில் சூரா ஃபாத்திஹா ஓதுவதன் சட்டம் என்ன?

பதில் : தொழுகையில் ஃபாத்திஹா சூராவை ஓதுவது கடமையாகும். இவ்விடயத்தில் ஜனாஸாத் தொழுகைக்கும் ஏனைய தொழுகைக்கும் வித்தியாசம் எதுவும் இல்லை. ஃபாத்திஹா சூராவை ஓதாதவரின் தொழுகை அங்கீகரிக்கப் படமாட்டாது எனும் நபி மொழியில் ஜனாஸாத் தொழுகையும் அடங்கிவிடும். (ஆகவே சூரா ஃபாத்திஹாவை ஓதுவது அவசியமாகும்.)

16. கேள்வி : ஜனாஸாத் தொழுகையில் ஒரு தக்பீரோ அல்லது அனைத்து தக்பீர்களுமோ தவறி விட்டவர் அவைகளை கழா செய்யவேண்டுமா? அவர் இமாமுடன் எவ்வாறு சேர்ந்து தொழுவது?

பதில் : நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நீங்கள் (இமாமுடன்) அடைந்ததை தொழுதுகொள்ளுங்கள் உங்களுக்கு தவறிவிட்டதை பூரணப்படுத்துங்கள். ஆகவே மேற்கூறப்பட்ட அவர் இமாம் எந்நிலையில் இருந்தாலும் அவருடன் தொழுகையில் இணையவேண்டும். பிறகு இமாம் ஸலாம் கொடுத்ததும் ஜனாஸா தூக்கப்படாது இருந்தால் தனக்கு தப்பிவிட்டதை பூரணப்படுத்தவேண்டும். ஜனாஸாவை தூக்கிவிடுவார்களோ என அவர் அஞ்சினால் எஞ்சியதை பூர்த்தி செய்வதோ அல்லது தக்பீர்களை மாத்திரம் கூறி இமாமுடன் ஸலாம் கொடுத்து விடுவதோ அவர் விருப்பம் என எமது சட்டக் கலை அறிஞர்கள் கூறுகின்றனர். அல்லாஹ்வே அனைத்தையும் அறிபவன்.

17 . கேள்வி : இறந்தவர்களுக்காக தொழுவதற்கு தடை செய்யப்பட்ட நேரங்கள் எவை? சுப்ஹு , அஸர் ஆகிய தொழுகைக்கு முன்பு மனிதர்கள் கூட்டமாக இருந்தாலும் ஜனாஸாத் தொழுகை ஏன் தொழுவதில்லை. குறிப்பாக மக்கா, மதீனா பள்ளிகளிலும் தொழுவதில்லை. இவ்வாறு செய்தால் செய்யப்பட்ட நேரங்களை தவிர்க்கலாமே ?

பதில் : தொழுவதற்கும், ஜனாஸாவை அடக்குவதற்கும் மூன்று நேரங்களில் நாம் தடுக்கப்பட்டுள்ளோம். அவை : 1. சூரியன் உதிப்பதிலிருந்து ஒரு ஈட்டியின் அளவு உயரும் வரை.
2. நடுப்பகலில் சூரியன் நடுவானிலிருந்து சாய்வதற்கு சற்று முன்பு சுமார் பத்து நிமிட கால எல்லையில். 3. சூரியன் மறைவதற்கு ஒரு ஈட்டியின் அளவு மீதம் இருக்கும் வேளையில். உக்பா இப்னு ஆமிர் (ரழி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸில் மூன்று நேரங்கள் உள்ளன. அதில் நாம் தொழவோ, மரணித்தவர்களை அடக்கவோ கூடாது என நபி (ஸல்) அவர்கள் எங்களை தடுத்துள்ளார்கள் என்று மேற்கூறப்பட்ட நேரங்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளது. சுப்ஹு , அஸர் ஆகிய தொழுகைகளுக்கு பிறகு உள்ள நேரங்களை பொருத்தவரை அந்நேரங்களில் ஜனாஸா தொழுகை தொழுவதற்கு எத்தகைய தடையும் இல்லை ஆகவே அத்தொழுகைகளுக்கு முன்பு ஜனாஸா தொழுகையை நிறைவேற்றவேண்டிய தேவை இல்லை.

18. கேள்வி : தொழுகைக்காகவோ, அடக்கம் செய்வதற்காகவோ ஜனாஸாவை பூமியில் வைப்பதற்கு முன்பு ஜனாஸாவிற்காக எழுந்து நிற்பதன் சட்டம் என்ன? மேலும் அடக்கம் செய்யும் போது நின்றுக்கொண்டிருப்பதன் சட்டம் என்ன? ஜனாஸாவை பள்ளிவாயலிற்குள் தொழுகை

நடாத்துவதற்காக கொண்டுவரும் வேளையில் மக்கள் தொழுகைக்கு பின்னால் கூறும் திக்ரையும் விட்டுவிடுகின்றனர் இவ்வாறு செய்வது சரியா?

பதில் : ஜனாஸா ஒன்று ஒரு மனிதரை கடந்து செல்லும் வேளையில் அதற்காக எழுந்து நிற்பது சுன்னத்தாகும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் அவ்வாறு செய்யுமாறு ஏவியுள்ளார்கள். (ஆமிர் பின் ரபீஆ வாயிலாக அறிவிக்கப்படும் இச்செய்தி புகாரி, முஸ்லிம் ஆகிய நூற்களில் இடம்பெற்றுள்ளது.) ஜனாஸாத் தொழுகையை முடித்து இமாம் ஸலாம் கொடுத்த பிறகு மேலும் தொழுவதற்கு அதிகமானோர் இருப்பார்களாயின், அத்தொழுகையின் நன்மையை அடைந்து கொள்ளும் பொருட்டு ஜனாஸாவை எடுத்துச்செல்லாது தாமதம் செய்வது நல்லது. ஏனெனில் தொழுவோர் அதிகமாக இருப்பது நல்லது. தொழுகை நடாத்திய பிறகு மேலும் தொழுவதற்கு யாரும் இல்லையெனில் அல்லது இருப்போரின் தொகை கொஞ்சமாக இருப்பின் மக்கள் சென்று விடாது இருக்க தாமதம் செய்யாது ஜனாஸாவை அடக்கம் செய்ய எடுத்துச்செல்வது நல்லது.

19. கேள்வி : மய்யித்தின் வீட்டார்கள், அல்லது அதை சுமந்துவருவோர் தொழுகை நடாத்தும் போது இமாமின் வலது பக்கத்தில் நிற்கவேண்டுமா? இதற்கு மார்க்கத்தில் ஆதாரம் உண்டா? இவ்விடயத்தில் நிரூபணமான நபிவழி என்ன?

பதில் : மய்யித்தின் வீட்டார்கள், அல்லது அதை சுமந்துவருவோர் இமாமுடன் இணைந்து அவரின் வலது பக்கத்திலோ அல்லது இடது பக்கத்திலோ தொழக்கூடாது. மாறாக மக்களுடன் ஒன்றிணைந்து ஸஃப்புகளில் நின்றே

தொழவேண்டும். அவ்வாறு தொழுவதற்கு முடியாவிடின் இமாமிற்கும் முதல் வரிசைக்குமிடையில் நின்று தொழவேண்டும். இமாமுடன் தொழுவோர் இருவராகவோ அல்லது அதைவிட அதிகமாகவோ இருப்பின் அவருடன் சமமாக நின்று தொழுவது கூடாது. இந்நிலையில் இமாமானவர் அவர்களுக்கு முன்னால் நின்றுதான் தொழவேண்டும். அவர்கள் எங்குமே இடம் இல்லை என கருதினால் இமாமின் வலது, இடது ஆகிய பக்கங்களில் நின்று தொழவேண்டும். வலதில் மாத்திரம் நிற்கக்கூடாது. ஜனாஸாவை கொண்டுவந்தவர் ஒரேஒருவராயின் அவர் இமாமின் வலது பக்கத்தில் நின்று தொழலாம். மரணித்த சிறு குழந்தை ஒன்றை கொண்டுவந்து வைத்தவர் வரிசைகளில் நின்று தொழுவதற்கு இடமில்லாத போது அவர் இமாமின் வலது பக்கத்தில் நின்று தொழுவதை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

20. சதைக்கட்டியாக விழும் சிசுவிற்கு தொழுகை நடாத்த வேண்டுமா?

பதில் : சதைக்கட்டியாக விழும் சிசு உயிர் ஊதப்பட்டதாக இருப்பின் அதற்கு தொழுகை நடாத்தவேண்டும். நான்கு மாதங்களை சிசு அடைந்துவிட்டால் அதற்கு உயிர் ஊதப்படும். நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்: உங்கள் ஒவ்வொருவரது படைப்பும் அவரின் தாய் வயிற்றில் நாற்பது தினங்கள் இந்திரியமாகவும், பிறகு அதேபோன்று (நாற்பது தினங்கள்) சினை முட்டையாகவும், பிறகு அதேபோன்று (நாற்பது தினங்கள்) சதைத் துண்டாகவும் இருக்கின்றது. பிறகு அச்சிசுவிடம் ஒரு மலக்கு அனுப்பிவைக்கப்படுகின்றார். அவர் அதற்கு உயிரை ஊதி நான்கு விசயங்களை எழுதுமாறு ஏவப்படுகிறார். அவை : அக்குழந்தையின்

உணவு, வாழ்நாள், அதன் செயல்கள் என்பவற்றையும் மேலும் அவ்வுயிர் பாக்கியமிக்கதா? அல்லது துர்பாக்கியமுடையதா? என்பதையும் எழுதுகிறார்.

சதைக்கட்டியான அச்சிசுவிற்கு நான்கு மாதங்கள் முடிவடைந்துவிட்டால் அதை குளிப்பாட்டி, கஃபன் செய்து, தொழுகை நடாத்தி முஸ்லிம்களின் அடக்கஸ்தலங்களில் அடக்கவேண்டும். நான்கு மாதங்கள் பூர்த்தியாகாவிட்டால் அதை குளிப்பாட்டவோ கஃபனிடவோ, தொழுகை நடாத்தவோ தேவையில்லை. மேலும் அதை பூமியில் எங்கு வேண்டுமானாலும் அடக்கம் செய்யலாம்.

21. கேள்வி : மய்யித்திற்கு தொழுகை நடாத்தும்போது அதன் தலையை இமாமின் வலப்பக்கத்தில் வைக்குமாறு மார்க்கத்தில் கூறப்பட்டுள்ளதா?

பதில் : இக்காரியம் நபிவழி என்பதற்கு எந்த ஹதீஸையும் நான் அறியவில்லை. ஆகவே ஜனாஸாவிற்கு தொழுகை நடாத்துபவர் அதன் தலையை தனது இடப்புறத்தில் வைத்தவாறு சில சமயங்களில் தொழவேண்டும். இதன் மூலம் இக்காரியம் கடமையான ஒரு அம்சமல்ல என்பது மக்களுக்கு தெளிவாகும். ஏனெனில் மய்யித்தின் தலைப் பகுதி கண்டிப்பாக இமாமின் வலப்புறத்தில் தான் வைக்கப்படவேண்டுமென்று மக்கள் நினைக்கின்றனர். இதற்கு எத்தகைய ஆதாரமும் கிடையாது.

22. கேள்வி : சன நெரிசல், சுன்னத்தான தொழுகையில் ஈடுபட்டிருத்தல், கடமையான தொழுகையை பூரணப்படுத்துதல் போன்ற காரணங்களுக்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ ஜனாஸாத் தொழுகையை நிறைவேற்றாமலும் அதனுடன் கூடச் செல்லாமலும் இருந்த

மனிதன் அதை அடக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்துவிட்டால் ஜனாஸாவிற்கு தொழுது, அதை அடக்கிய நன்மையை அடைவாரா?

பதில் : சுன்னத்தான தொழுகைக்காக ஜனாஸா தொழுகையை விட்டவர் ஜனாஸா தொழுகையின் நன்மையை அடையமுடியாது. ஏனெனில் சுன்னத்தான தொழுகையை பொருத்தவரை ஜனாஸாத் தொழுகையை முடிக்கும் வரை பிற்படுத்தி வைக்கமுடியும். எவரொருவர் ஜனாஸாத் தொழுவதிலும், அடக்கம் செய்வதிலும் கலந்துக் கொள்ளும் ஆர்வத்தில் வருகை தந்து பிறகு ஏதேனும் தடை ஏற்பட்டால் அல்லது அவர் வருகைக்கு முன்பு மக்கள் தொழுகை நடாத்தி அடக்கஸ்தலத்திற்கும் கொண்டுசென்று விட்டார்கள் என்றிருந்தால் அவருக்கு அதற்குரிய நன்மை கிடைக்கும். காரணம் அவர் செய்ய நாடி அதற்காக தன்னால் முடிந்த ஏற்பாட்டையும் செய்தார். எவரொருவர் ஒரு காரியத்தை செய்யும் எண்ணத்துடன் அதற்கான முயற்சியை தன்னால் முடிந்தவரை செய்வாரோ அவரைப் பொறுத்தவரை முழுமையான கூலியை அடைவார். அல்லாஹ் கூறுகின்றான் :

وَمَنْ يُهَاجِرْ فِي سَبِيلِ اللَّهِ يَجِدْ فِي الْأَرْضِ مُرَاغَمًا كَثِيرًا وَسَعَةً وَمَنْ يَخْرُجْ مِنْ بَيْتِهِ
مُهَاجِرًا إِلَى اللَّهِ وَرَسُولِهِ ثُمَّ يُدْرِكْهُ الْمَوْتُ فَقَدْ وَقَعَ أَجْرُهُ عَلَى اللَّهِ (4 : 100)

இன்னும், எவர் வீட்டைவிட்டு வெளிப்பட்டு அல்லாஹ்வின் பக்கமும் அவன் தூதர் பக்கமும் ஹிஜ்ரத் செல்லும் நிலையில் எவருக்கு மரணம் ஏற்பட்டு விடுகின்றதோ அவருக்குரிய நற்கூலி வழங்குவது நிச்சயமாக அல்லாஹ்வின் மீது கடமையாகி விடுகின்றது. (4 : 100)

(தாமதமாக பிந்தி வருகை வந்தவர்) முடியுமாயின் அடக்கஸ்தலத்தில் தொழுது கொள்ளலாம்.

23. கேள்வி : பள்ளிவாயிலில் ஜனாஸாத் தொழுகை தவறிவிட்ட தனி மனிதனோ அல்லது கூட்டத்தினரோ அந்த ஜனாஸாவிற்காக அதை அடக்குவதற்கு முன்போ அல்லது அடக்கிய பிறகோ அடக்கஸ்தலத்தில் தொழுகையை நிறைவேற்றலாமா?

பதில் : ஆம். அவ்வாறு தொழலாம். அடக்குவதற்கு முன்பு அவர்கள் தொழமுடிந்தால் தொழுதுவிடவேண்டும். அடக்கிய பிறகுதான் அவர்கள் வருகை தந்தால் கப்ரின் மீது (பக்கத்தில்) நின்று தொழவேண்டும். நபி (ஸல்) அவர்கள் கப்ரின் மீது (அதன் அருகில்) நின்றவர்களாக தொழுதுள்ளார்கள் எனும் செய்தி பதிவாகியுள்ளது.

24. கேள்வி : ஜுமாஅத் தொழுகை முடிவடைந்த பிறகு ஜனாஸாவை தொழுகைக்காக தயார்செய்து வைக்கப்பட்ட பின் பள்ளிக்குள் நுழையும் மனிதன் இமாமுடன் சேர்ந்து ஜனாஸாவிற்கு தொழுவேண்டுமா? அல்லது கடமையான தொழுகையை நிறைவேற்றவேண்டுமா?

பதில் : அவர் இமாமுடன் ஜனாஸாத் தொழுகையையே நிறைவேற்றவேண்டும். ஏனெனில் கடமையான தொழுகையை பிறகு தொழுதுகொள்ள முடியும். ஜனாஸாவை பொருத்த வரை அதற்கு தொழுகை நடாத்திய பிறகு கொண்டுசென்று விடுவார்கள்.

25. கேள்வி : இறந்தவர் தொழுகையாளியாக இல்லாவிட்டாலோ அல்லது அவர் தொழுபவரா இல்லையா எனும் சந்தேகம் இருந்தாலோ அல்லது அவர் நிலை பற்றி எதுவுமே நாம் அறியாதிருந்தாலோ அவர் மீது ஜனாஸாத் தொழுகை தொழலாமா?

பதில் : இறந்தவர் தொழுகையாளி அல்ல என்பது உறுதியாகத் தெரிந்தால் அவருக்காக தொழக்கூடாது. ஏனெனில் அவர் காஃபிர், மார்க்கத்தை விட்டும் வெளியானவராவார். மய்யவாடியல்லாத வேறு ஒரு இடத்தில் குழியை தோண்டி அதில் அவரை எறிந்திடவேண்டும், அவருக்காக தொழவும் கூடாது. ஏனெனில் அவருக்கு எத்தகைய மதிப்பும் (மார்க்கத்தில்) இல்லை. அவர் மறுமையில் ஃபிர்அவ்ன், ஹாமான், காரூன், உபை இப்னு கலஃப் போன்ற காஃபிர்களுடன் எழுப்பப்படுவான்.

எவரின் நிலைமை அறியப்படவில்லையோ அல்லது சந்தேகிக்கப்படுகிறதோ அவருக்காக தொழுகை நடாத்தப்படும். ஏனெனில் இத்தகையோர் காஃபிர்கள் என்பதை தெளிவாக (ஆதாரத்துடன்) அறியும் வரை அவர்களை முஸ்லிம்களாகவே கருதவேண்டும். மரணித்த அம்மனிதரை சந்தேகிப்பவர் துஆவின்போது யாஅல்லாஹ் இவர் ஓர் விசுவாசியாக இருப்பின் இவருக்கு மன்னிப்பு வழங்கி, அருள்புரிவாயாக! என்று நிபந்தனையுடன் பிரார்த்திக்கலாம். துஆவின்போது இவ்வாறு நிபந்தனை விதிக்கும் முறை அல்குர்ஆனில் வந்துள்ளது. மனைவியர் மீது பழிசுமத்தி அதற்கான நான்கு சாட்சிகளை கொண்டுவராதோர் (நான்கு முறை தான் உண்மையாளன் என்று அல்லாஹ் மீது சத்தியம் செய்து கூறிவிட்டு) ஐந்தாம் முறை தான் பொய்யராக இருப்பின் அல்லாஹ்வின் சாபம் தன் மீது உண்டாகட்டும் என கூறவேண்டும். அவ்வாறே அவளும் தான் உண்மையாளராக இருப்பின் அல்லாஹ்வின் கோபம் தன் மீது உண்டாகட்டும் என கூறவேண்டும்.
(பொய்யராக இருப்பின், உண்மையாளராக இருப்பின் என நிபந்தனையுடன் இங்கு சாபம் கூறப்பட்டுள்ளது.)

26. கேள்வி : ஜனாஸாத் தொழுகையில் துஆ கேட்கும்போது யாஅல்லாஹ் இவர் லாஇலாஹ இல்லல்லாஹ் எனும் சாட்சி கூறியவராக இருந்திருந்தால் என்று நிபந்தனையிட்டு கேட்கலாமா? இதற்கு மார்க்கத்தில் ஆதாரம் ஏதும் உண்டா?

பதில் : இறந்த மனிதரில் பலமான சந்தேகம் இருப்பின் யாஅல்லாஹ் இவர் முஃமினாக இருப்பின் இவரை மன்னித்து அருள்புரி என்று துஆ கேட்பது குற்றமல்ல. பலமான சந்தேகம் இல்லாவிட்டால் அவ்வாறு சொல்லக் கூடாது. காரணம் முஸ்லிம்களை அடிப்படையில் இஸ்லாத்தில் உள்ளவர்கள் என்றே கருதவேண்டும்.

துஆவின் போது நிபந்தனையிட்டு கேட்கலாம் என்பதற்கு பின்வருபவை ஆதாரங்களாகும். (மனைவியர் மீது பழிசுமத்தி அதற்கான நான்கு சாட்சிகளை கொண்டுவராதோர் நான்கு முறை தான் உண்மையாளன் என்று அல்லாஹ் மீது சத்தியம் செய்து கூறிவிட்டு) ஐந்தாம் முறை தான் பொய்யராக இருப்பின் அல்லாஹ்வின் சாபம் தன் மீது உண்டாகட்டும் என கூறவேண்டும். அவ்வாறே பெண் அவளும் தான் உண்மையாளராக இருப்பின் அல்லாஹ்வின் கோபம் தன் மீது உண்டாகுமென கூறவேண்டும்.

சஃத் இப்னு அபீ வக்காஸ் (ரழி) அவர்கள் ஒருவருக்கு எதிராக துஆ செய்யும் போது "யாஅல்லாஹ் இவர் முகஸ்துதிக்காரராக இருப்பின் இவரை குருடாக்கி, நீண்ட வாழ்நாளை வழங்கி, சோதனைக்கு ஆளாக்கிவிடு" (முகஸ்துதிக்காரராக இருப்பின்) என்று நிபந்தனையிட்டு கூறினார்கள். மேலும் "உன் இறைவனிடம் நீ நிபந்தனையிட்டது உனக்குண்டு" என நபி (ஸல்) அவர்கள்

லுபாஆ பின்த் ஸு பைர் (ரழி) அவர்களுக்கு கூறியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

27. ஜனாஸாவை புஜங்களில் சுமந்து செல்வது சிறந்ததா? அல்லது வாகனத்தில் ஏற்றி செல்வது சிறந்ததா? மேலும் ஜனாஸாவுடன் நடந்தோ வாகனத்திலோ செல்பவர் அதன் முன்னால் செல்வது சிறந்ததா? அல்லது பின்னால் செல்வது சிறந்ததா?

பதில் : ஜனாஸாவை புஜங்களில் சுமந்து செல்வதே சிறந்தது. ஏனெனில் சுமந்து செல்லுதல் என்பதன் நேரடியான முறை அதுவாகவே உள்ளது. மேலும் படிப்பினை பெறுவதற்கான சிறந்த வழியாகவும், சந்தைகளில் மக்களை கடந்து செல்லும்போது அதை ஜனாஸா என அறிந்து அதற்காக துஆ செய்யவும் காரணமாக இருக்கும். மேலும் இவ்வாறு செல்வது பெருமையற்ற முறையாகவும் இருக்கின்றது. ஆயினும் மலை, கடுமையான வெப்பம் அல்லது குளிர், ஜனாஸாவை சுமந்து செல்வோரின் தொகை குறைவாக இருத்தல் போன்ற காரணங்கள் இருப்பின் வாகனத்தில் கொண்டு செல்வது சிறந்ததாயிருக்கும். ஜனாஸாவுடன் செல்வது பற்றி அறிஞர்கள் கூறுகையில் : நடந்து செல்பவர் அதன் முன்னாலும் வாகனத்தில் செல்பவர் பின்னாலும் செல்வது சிறந்தது என்று சில அறிஞர்கள் கூறுகின்றனர். வேறு சில அறிஞர்களோ மனிதன் முன்னாலோ, பின்னாலோ, இடதிலோ, வலதிலோ தனக்கு இலகுவான பக்கத்தால் செல்லலாம் என்று கூறுகின்றனர்.

28 : கேள்வி : ஜனாஸாவை சுமந்து செல்லுகையில் தர்பீஃ செய்தல் என்பதன் அர்த்தம் என்ன? இதற்கு ஆதாரம் உண்டா?

பதில் : தர்பீஃ என்பதன் அர்த்தம் ஜனாஸா வைக்கப்பட்டுள்ள கட்டிலின் நான்கு கால்கள் பகுதி வழியாகவும் அதை சுமப்பதாகும். அதாவது மய்யித்தை சுமக்கும் மனிதன் முதலில் வலப்பக்கத்திலுள்ள முன் காலில் ஆரம்பித்து பிறகு அதே பக்கத்தின் பின் காலை பிறகு மையயித்தின் இடதுபக்கத்தின் முன் காலை பிறகு அப்பக்கத்தின் பின் காலை இவ்வாறு நான்கு பக்கத்தையும் சுமப்பதாகும். முன்னோர்கள் (சஹாபாக்கள், தாபிஈன்கள்) இவ்வாறு செய்ததாக சில செய்திகள் வந்துள்ளன. அறிஞர்களும் இதை சுன்னத் என்றும் கூறியுள்ளனர், ஆயினும் நெரிசலான வேளையில் மனிதன் தான் சிரமப்படாமலும் பிறரை சிரமப்படுத்தாமலும் இருக்கும் வகையில் தனக்கு இலகுவான பக்கத்தால் சுமந்த செல்வது ஏற்றமாயிருக்கும்.

29. கேள்வி : ஜனாஸாவை பின் தொடர்ந்து அடக்கஸ்தலம் வந்தவர் எப்போது அமரவேண்டும்?

பதில் : குழியிலோ, அல்லது குழி தோண்டும்வரை நிலத்திலோ ஜனாஸா வைக்கப்பட்டால் அப்போது அவர் உட்காரலாம்.

30. கேள்வி : பள்ளிவாயிலில் தொழுவிக்கப்பட்ட ஜனாஸாவை அடக்கும் வேளையில் தொழுவதற்காக ஒரு குழுவினர் வருகிறார்கள் எனும் காரணத்தினால் ஒரு பத்து நிமிடமாவது அதை அடக்காது பிற்படுத்தலாமா?

பதில் : ஜனாஸாவை விரைவாக அடக்குவதே சுன்னத்தாகவும் சிறப்பானதாகவும் இருக்கின்றது. எவரையும் அதற்காக எதிர்பார்க்கத் தேவையில்லை. தாமதமாக அதை அடக்கிய பிறகும் தொழுதுகொள்ளலாம். நபி (ஸல்)

அவர்கள் கப்ரின் அருகில் அதை அடக்கிய பிறகும் தொழுதுள்ளார்கள் என ஹதீஸில் வந்துள்ளது.

31. கேள்வி : எப்பகுதியைக் கொண்டு ஜனாஸாவை குழியில் இறக்க வேண்டும்?

பதில் : வசதியான பகுதியை முதலில் இறக்கலாம். கால் பகுதியை முதலில் இறக்கவேண்டுமென சில அறிஞர்களும், தலைப்பகுதியைக் கொண்டு இறக்கவேண்டுமென வேறு சில அறிஞர்களும் கூறியுள்ளனர். ஆனால் இவ்விடயத்தில் எப்படியும் நடந்துகொள்ளலாம்.

32 . கேள்வி : பெண் ஜனாஸாவை கப்ரில் வைக்கும்போது அக்கப்ரை மறைப்பதன் சட்டம் என்ன? எவ்வளவு நேரம் மறைக்க வேண்டும்?

பதில் : பெண்ணின் உடல் அடையாளங்கள் வெளிப்படாமல் இருக்கும் பொருட்டு அவளின் கப்ரை மறைத்து உடலை வைக்கவேண்டுமென சில அறிஞர்கள் கூறுகின்றனர். ஆயினும் இது கடமையான ஒரு காரியமல்ல. (ஆகவே மறைப்பதாயின்) கற்களை வரிசையாக அடுக்கும் வரைதான் இவ்வாறு மறைக்கவேண்டும்.

33 . கேள்வி : மய்யித்தை அடக்கும் போது அதிகமானோர் சப்தமிட்டு பேசுகின்றனர், இது குற்றமா?

பதில் : தேவை ஏற்படும் போது இவ்வாறு சப்தமிட்டு கல்லை தாருங்கள் என்றோ, தண்ணீரை தாருங்கள் என்றோ கூறுவது குற்றமில்லை.

34 . கேள்வி : ஜனாஸாவிற்காக குழி தோண்டும் வேளையில் உபதேசங்கள் செய்பவர்கள் பற்றி தாங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? தொடர்ச்சியாக அனைத்து ஜனாஸாக்களுக்கும் இவ்வாறு செய்வதில் குற்றம் உண்டா?

பதில் : இக்காரியம் சுன்னத்தான ஒரு அம்சம் அல்ல என்பதே என் கருத்து. நபி (ஸல்) அவர்களோ அன்னாரின் தோழர்களோ இவ்வாறு செய்ததாக ஒரு ஹதீஸிலும் வரவில்லை. ஒரே ஒரு முறை மாத்திரம் அன்சாரி தோழர் ஒருவரின் ஜனாஸாவிற்காக சென்ற நபி (ஸல்) அவர்கள் அதற்கு குழி தோண்டும் வரை அமர்ந்திருக்க சஹாபாக்களும் அவரை சூழ அமர்ந்தார்கள். அப்போது நபியவர்கள் மனிதன் இறக்கும் வேளையிலும், அடக்கம் செய்யப்பட்ட பிறகும் அவன் நிலைமை என்னவாகும் என்பது பற்றி உரையாற்றினார்கள். இவ்வாறே அடக்கம் செய்யப்பட்டுக்கொண்டிருந்த ஒரு கப்ரு அருகில் இருந்த சமயத்தில் “உங்களில் ஒவ்வொருவருக்கும் அவரின் சுவன இருப்பிடம் அல்லது நரக இருப்பிடம் என்னவென்று தீர்மானிக்கப்பட்டுவிட்டது ” என்று கூறினார்கள். இதை சாதாரண ஒரு பேச்சாகவே கூறினார்கள். சில மனிதர்கள் செய்வது போன்று பிரசங்கியாக நின்றுக்கொண்டு உரையாற்றவில்லை. மேலும் அன்னார் அதை வழமையாக்கிக் கொள்ளவுமில்லை. ஆகவே அடக்கஸ்தலத்தில் எதிர்பார்த்துக் கொண்டு இருக்கும் மனிதர்களிடம் இருக்கும் ஒருவர் இது போன்ற பேச்சுக்களை பேசினால் அது சுன்னத்தாகும். அதில் குற்றமில்லை. பிரசங்கம் செய்பவர் போன்று எழுந்து நின்றுக் கொண்டு உரை நிகழ்த்துவது சுன்னத்தான காரியமல்ல.

35 . கேள்வி : அடக்கஸ்தலங்களுக்குள் நுழையும் போது வலது காலையும், வெளியேறும் போது இடது காலையும் முற்படுத்தி செல்வதன் சட்டம் என்ன?

பதில் : இவ்விடயத்தில் சுன்னத்தான முறை எதுவும் நபி (ஸல்) அவர்கள் மூலம் கூறப்படவில்லை. ஆகவே மனிதன் தனது சூழ்நிலைக்கேற்ப அங்கு நுழைவான். வலது காலை வைத்து நுழையும் சந்தர்ப்பம் அமைந்தால் வலது காலை வைத்தும், இடது காலை வைத்து நுழையும் சந்தர்ப்பம் அமைந்தால் இடது காலை வைத்தும் நுழைவான். குறிக்கப்பட்ட முறையொன்று நபிவழியில் வந்துள்ளதாக அறியும் வரை இவ்வாறே நடந்துக் கொள்வான்.

36 . கேள்வி : ஜனாஸாவை மண்ணால் மறைக்கும் போது ஓதவேண்டிய துஆ என்ன? மின்ஹா கலக்னாகும், வஃபீஹா நூதுகும் எனும் ஆயத்தை ஓதுமாறு ஹதீஸ் வந்துள்ளதா?

பதில் : மூன்று பிடி மண்ணை தூவுவது சுன்னத்தான காரியம் என சில அறிஞர்கள் கூறியுள்ளனர். மின்ஹா கலக்னாகும், வஃபீஹா நூதுகும் வமின்ஹா நுக்ரிஜ்கும் தாரதன் உக்ரா எனும் ஆயத்தை ஓதுமாறு ஹதீஸ் ஏதும் வரவில்லை. நபி (ஸல்) அவர்கள் எதை செய்யுமாறு கட்டளையிட்டார்களோ அதுவே ஜனாஸாவை அடக்கிய பிறகு பேணவேண்டிய சுன்னத்தான காரியங்கள் ஆகும். மய்யித்தை அடக்கி முடித்த பிறகு அதனிடம் நின்றவாறு (மரணித்த) உங்கள் சகோதரனுக்காக நீங்கள் மன்னிப்புக் கோருங்கள், அவருக்காக உறுதியான நிலைப்பாட்டை கேளுங்கள் ஏனெனில் இப்போது அவர் விசாரிக்கப்படப் போகிறார் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆகவே நாம் அல்லாஹ்வே! இவரின் பாவத்தை

மன்னிப்பாயாக! உறுதியான நிலைப்பாட்டை இவருக்கு வழங்குவாயாக! என்று மூன்று தடவைகள் பிரார்த்திப்போமாக.

37 . கேள்வி : இறந்தவரின் வீட்டாருக்காக (தஃஸியா) ஆறுதல் கூறும் முறை யாது ?

பதில் : மரணவீட்டாருக்கு ஆறுதல் கூறப்படும் முறைகளில் சிறந்தது யாதெனில், நபி (ஸல்) அவர்கள் தமது மகளுக்கு கூறிய ஆறுதல் முறையே. மரணத்தருவாயில் இருந்த தனது மகளிடம் அல்லது மகனிடம் ஆஜராகுமாறு தூதர் ஒருவரை நபிகளாரின் மகள் அனுப்பியபோது, நபியவர்கள் அத்தூதரிடம் பின்வருமாறு ஆறுதல் கூறி அனுப்பினார்கள். "பொறுமையை கடைபிடிக்குமாறும், நன்மையை எதிர் பார்க்குமாறும் அன்னாருக்கு கூறுங்கள். நிச்சயமாக அல்லாஹ் எதை எடுத்துக்கொண்டானோ மேலும் எதை கொடுத்துவிட்டானோ அவை அனைத்தும் அவனுக்கே சொந்தமானது. அனைத்து பொருளுக்கும் அவனிடம் குறித்ததொரு தவணை உண்டு."

பின்வரும் வார்த்தைகளால் ஆறுதல் கூறும் முறை மக்களிடம் வழக்கில் இருந்துவருகிறது.
“ அஃழமல்லாஹு அஜ்ரக வஅஹ்ஸனல்லாஹு அஸாஅக வகபரல்லாஹு மய்யிதக”
சில அறிஞர்களும் இவ்வாறு ஓதவேண்டுமென கூறுகின்றனர். ஆயினும் ஹதீஸில் வந்துள்ளதை கூறுவதே மிக ஏற்புடையதும் நல்லதுமாகும்.

38. கேள்வி : மரணவீட்டாருக்காக ஆறுதல் (தஃஸியா) சொல்லும் போது முஸாபஹா செய்வது சுன்னத்தாகுமா?

பதில் : மரணத்திற்காக த.:.ஸியா (ஆறுதல்) சொல்லும் போது முஸாபஹா செய்வதோ, முத்தமிடுவதோ சுன்னத்தான காரியம் அல்ல. முஸாபஹா என்பது சந்திப்பின் போது புரியும் காரியமாகும். கவலையோடிருப்பவரை சந்திக்கும் போது ஸலாம் கூறி, முஸாபஹா செய்வது சுன்னத்தாகும். இங்கு முஸாபஹா சுன்னத் என்பது சந்திப்பிற்காகவே, த.:.ஸியாவிற்காக அல்ல. ஆயினும் மக்கள் இதை ஒரு வழக்கமாக ஆக்கிவிட்டனர். அதை சுன்னா என அவர்கள் கருதுவார்களானால் அது சுன்னா இல்லை என தெரிவிப்பது அவசியம். அவ்வாறின்றி வெறும் வழக்கமாக செய்தால் குற்றமில்லை. எனினும் இவ்விடயத்தில் நான் திருப்தி கொள்ளவில்லை. சந்தேகமின்றி இவ்வாறு செய்யாது விடுவதே ஏற்றது. இங்கு கவனிக்கவேண்டிய இன்னுமொரு விடயமும் உள்ளது. அதாவது, த.:.ஸியாவின் மூலம் எதிர்பார்க்கப்படுவது பாதிக்கப்பட்டவர் பொறுமை செய்வபவராகவும், அல்லாஹ்விடம் கூலியை எதிர்பார்ப்பவராகவும் இருப்பதை ஆர்வப்படுத்துவயோகும். மாறாக சந்தர்ப்பம் வாய்க்கும் அனைவரும் கூறுகின்ற வாழ்த்து போன்றதல்ல. ஆகவே மனிதனுக்கு மரண நிகழ்வு ஏதும் ஏற்பட்டால், அவனிடம் பொறுமை, அல்லாஹ்வின் கூலியை எதிர்பார்த்தல் போன்ற பண்புகளை பலப்படுத்தும் வண்ணம் ஆறுதல் கூறவேண்டும்.

39. கேள்வி : த.:.ஸியா கூறும் நேரம் எது ?

பதில் : இறப்பு ஏற்பட்ட நேரத்திலிருந்தே த.:.ஸியாவின் நேரம் ஆரம்பமாகிவிடுகிறது. மரணமல்லாத வேறொரு துன்பத்திற்காக த.:.ஸியா கூறுவதாயின் அது ஏற்பட்டது முதல் மறக்கப்பட்டு, பாதிக்கப்பட்டவரின் மனதைவிட்டும்

நீங்கும்வரை த:ஃஸியா கூறலாம். காரணம் நான் ஏற்கனவே கூறியதுபோன்று த:ஃஸியா என்பது வாழ்த்தோ, காணிக்கையோ அல்ல. பாதிக்கப்பட்டவர் துன்பத்தை சகித்து, அல்லாஹ்வின் கூலியை எதிர்பார்க்கும் மன வலிமையை பெறுவதே இதன் நோக்கமாகும்.

40. கேள்வி : மய்யித்தை அடக்கம் செய்வதற்கு முன்பு த:ஃஸியா கூறுவது கூடுமா?

பதில் : ஆம். மரணித்தவரை அடக்கம் செயவதற்கு முன்பும் அடக்கிய பின்பும் த:ஃஸியா கூறுவது ஆகும். - சற்று முன்பு நாம் கூறியது போன்று - மரணித்தவர் மரணமான நேரம் முதல் துன்பம் மறக்கும் வரைக்கும் த:ஃஸியா கூறும் நேரமே.

41. மரணமானவரின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறும் நோக்குடன் அவர்கள் வீட்டிற்கு செல்வது கூடுமா?

பதில் : இக்காரியத்திற்கு ஆதாரம் எதுவும் கிடையாது. ஆயினும் மரணித்த மனிதன் உன் குடும்பத்தைச் சேர்ந்தவனாக, செல்லாவிட்டால் உறவு முறியலாம் என நீர் பயந்தால் அப்போது அவர் வீட்டிற்கு செல்வதில் குற்றம் இல்லை. மரண வீட்டில் குடும்பத்தினர் ஒன்றுகூடி, ஆறுதல் கூற வருபவர்களை சந்திப்பதென்பது முன்னோர்களால் நியாஹா எனும் தடுக்கப்பட்ட காரியமாக கருதப்பட்டுள்ளது. ஆகவே அவர்கள் வீடுகளை பூட்டிவிடுவார்கள். சந்தையிலோ, பள்ளிவாயிலிலோ சந்திக்க நேர்ந்தால் ஆறுதல் கூறிக்கொள்வார்கள். இங்கு இரண்டு காரியங்கள் உள்ளன.

ஒன்று : மய்யித்தின் வீட்டாரிடம் செல்லல், இது மார்க்கத்தில் கூறப்படவில்லை. ஆயினும் மரணித்தவர்

உறவினராய் இருந்து அவர் வீட்டுக்கு செல்லாதிருப்பது குடும்ப உறவை முறித்துவிடும் என பயந்தால் மரணித்தவரின் வீட்டுக்கு செல்லலாம்.

இரண்டு: ஆறுதல் கூற வருவோரை வரவேற்கவென எதிர்பார்த்திருத்தல். இதற்கும் மார்க்கத்தில் எத்தகைய சான்றும் இல்லை. வருவோரை வரவேற்று அவர்களுக்கு உணவு தயாரித்து வழங்குவதை முன்னோர் தடைசெய்யப்பட்ட காரியமாகவே கணக்கிட்டுள்ளனர்.

42. கேள்வி : மய்யித்தை எடுத்து செல்லும் போது அதன் தலைப் பகுதியை முற்படுத்தி கொண்டு செல்வது சுன்னத்தான காரியமா?

பதில் : மய்யித்தின் தலைப்பகுதியை முற்படுத்தி செல்வதே முறையான காரியமாகும். அதன் கால் பகுதியை முற்படுத்தி செல்வது முறையற்ற செயலாகும். இவ்விடயத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் நடைமுறை ஏதும் இருப்பதாக நான் அறியவில்லை.

43. கேள்வி : மய்யித்திற்கு போடப்படுகின்ற மூன்று மண் பிடிகளையும் அதன் தலைப் பகுதி வழியாகவே போடப்பட வேண்டுமென்பதற்கு ஆதாரம் ஏதும் உண்டா?

பதில் : இதற்கு ஆதாரம் இல்லை. எல்லாம் சமமே. இவ்விடயத்தில் விரும்பிய படி நடந்து கொள்ளலாம்.

44. கேள்வி : மய்யித்தை அடக்கிய பிறகு தல்கீன் ஓதுவதன் சட்டம் என்ன?

பதில் : அடக்கிய பிறகு தல்கீன் கிடையாது என்பதே சரியான சொல். பாவமன்னிப்பு, உறுதிப்பாடு ஆகியவற்றை வேண்டி பிரார்த்திப்பதே சரியானது. காரணம் அபூ உமாமா (ரழி) அவர்கள் அறிவிக்கக்கூடிய தல்கீன் பற்றிய ஹதீஸ் பலவீனமானது.

45. கேள்வி : சில முஸ்லிம்கள் மய்யித்தை அடக்கம் செய்வதற்கு முன்பு அதற்கு சாட்சி கூறுமாறு வேண்டுகின்றனர். அதாவது அதன் உறவினர் ஒருவரோ அல்லது பலரோ இம்மய்யித்தைப் பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள் என்று கேட்பார். அதற்கு அங்கிருப்போர் அவர் நல்லவர், நேர்வழி நடந்தவர் என நாம் சாட்சி கூறுகிறோம் என்று கூறுவர். இவ்வாறு செய்வதற்கு மார்க்கத்தில் ஆதாரம் உண்டா?

பதில் : இதற்கு மார்க்கத்தில் ஆதாரம் இல்லை என்பது மட்டுமல்ல, இவ்வாறு செய்வது ஆகாத காரியமாகவும் பித்அத் எனும் மார்க்கத்தில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட அம்சமாகவும் உள்ளது. நல்லதாக கூறுவதற்கு பதிலாக யாரும் மோசமாக கூறிவிட்டால் அது அந்த மய்யித்தை கேவலப்படுத்தியதாக ஆகிவிடும். ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் தமது தோழர்களோடு இருக்கையில் ஒரு ஜனாஸா கொண்டு செல்லப்பட்டது. அதனை தோழர்கள் புகழ்ந்தனர். அப்போது நபியவர்கள் "கடமையாகிவிட்டது" எனக் கூறினார்கள். பிறகு வேறொரு ஜனாஸா கொண்டு செல்லப்பட்டது. அதனை அவர்கள் மோசமாக பேசினர். அப்போதும் "கடமையாகிவிட்டது" என்றனர். நபித்தோழர்கள் நீங்கள் கடமையாகிவிட்டது என்று கூறியதன் அர்த்தம் என்ன? என நபி (ஸல்) அவர்களிடம் வினவினர், அதற்கு நபியவர்கள் கூறியதாவது: நீங்கள் புகழ்ந்து கூறிய

மனிதனுக்கு சுவனம் கடமையாகிவிட்டது. மேலும் நீங்கள் இகழ்ந்து கூறிய மனிதனுக்கு நரகம் கடமையாகிவிட்டது எனக் கூறினார்கள். (நூல் : புகாரி, முஸ்லிம்)

46. கேள்வி : ஈரமான மரப்பட்டையையோ அல்லது வேறு பொருட்களையோ கப்ரின் மீது வைப்பது சுன்னத்தான காரியமா? கப்ரில் வேதனை செய்யப்பட்டுக்கொண்டிருந்த இருவரின் ஹதீஸை இதற்கு ஆதாரமாக கொள்ளலாமா? அல்லது அக்காரியம் நபி (ஸல்) அவர்களுக்கு மாத்திரம் சொந்தமான அம்சமா? சொந்தமான அம்சமாயின் அதனை குறிக்கக்கூடிய ஆதாரம் என்ன?

பதில் : ஈரமான மரப்பட்டையை அல்லது வேறு பொருட்களையோ கப்ரின் மீது வைப்பது சுன்னத்தான விசயம் அல்ல, மாறாக அது பித்அத் எனும் மார்க்கத்தில் இல்லாத அம்சமாகும். மேலும் மரணித்தவர் மீது வைக்கப்படுகின்ற தீய சிந்தனையுமாகும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் அனைத்து கப்ருகள் மீதும் அவ்வாறு வைக்கவில்லை, அவ்விரு கப்ருகள் மீது மாத்திரமே வைத்தார்கள். அவ்விரு கப்ரிலுள்ளோர்கள் வேதனை செய்யப்படுவதை அன்னார் அறிந்ததே அதற்கான காரணம். ஆகவே கப்ரின் மீது மரப்பட்டையை வைப்பது பெரும் குற்றமாகும், அம்மய்யத்தின் மீது வைக்கப்படுகின்ற தீய எண்ணமாகும். தனது முஸ்லிமான சகோதரன் மீது தீய எண்ணம் கொள்வது கூடாத காரியம். கப்ரின் மீது அப்பட்டையை வைப்பவர் அக்கப்ராளி வேதனை செய்யப்படுவதாக நம்புகிறார் என்பதே அர்த்தமாகும். காரணம் நபி (ஸல்) அவர்கள் அவ்விரு கப்ருகளும் வேதனை செய்யப்படுவதை அறிந்த நேரத்தில்தான் அப்பட்டைகளை வைத்தார்கள்.

கப்ரின் மீது மரப்பட்டையையோ அல்லது அதுபோன்ற வேறு பொருளையோ வைப்பது பித்அத் எனும் மார்க்கத்தில் இல்லாத அம்சமாகவும், மரணித்தவர் கப்ரில் வேதனை செய்யப்படுவதாக தீய எண்ணம் கொண்டு அவரின் வேதனையை குறைப்பதற்கு நாடும் ஒரு செயலாகவுமே உள்ளது. மேலும் அவருக்காக நபி (ஸல்) அவர்கள் செய்ததுபோன்று நாமும் செய்தால் நமது பரிந்துரையை அல்லாஹ் ஏற்றுக்கொள்வான் என்பதற்கும் எம்மிடம் எவ்வித அறிவும் கூட இல்லை. இதுவே இவ்விடயத்தில் நாம் கூறும் சுருக்கமான பதில்.

47. கேள்வி : கடமையான தொழுகையை முடித்த மாத்திரத்திலேயே மய்யித்தின் குடும்பத்தினர் அதற்கு தொழுகை நடாத்துவதற்காக அவசரப்பட்டு அதனை (முன்னால்) கொண்டுவந்துவிடுகின்றனர். மரணித்தவரை அவசரமாக அடக்கம் செய்யவேண்டுமென்று காரணமும் கூறுகின்றனர். ஆகவே இவர்களுக்குரிய கடமை யாது என்பதையும் இந்நிலையில் இமாமிற்கு தாங்கள் கூறும் அறிவுரை யாது என்பதையும் விவரிக்கவும்.

பதில் : இவ்விடயத்தில் என் கருத்து யாதெனில் : கடமையான தொழுகையிலிருந்து இமாம் ஸலாம் கொடுத்ததும் எழுந்து அத்தொழுகையை பூரணப்படுத்துவோர் அதிகமாக இருப்பின், ஜனாஸாவை முற்படுத்தாது தாமதிப்பது நல்லது. ஏனெனில் ஜனாஸாவிற்காக தொழுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவும், ஜனாஸாத் தொழுகையின் நன்மையை தாமதமாக வருபவர்கள் அடைந்து கொள்ளவும் அது காரணமாகலாம். இத்தகைய காரணங்கள் எதுவும் இல்லாதிருப்பின் ஜனாஸாத் தொழுகையை

விரைவுபடுத்துவது சிறப்பாகவும், ஏற்றமான செயலாகவும் இருக்கும்.

48. கேள்வி : மய்யித்தின் உரிமையாளர் இவர் யாருக்கேனும் ஏதேனும் வழங்க இருக்குமாயின் அதற்கு ஹலால் சொல்லிவிடுங்கள் என்று மக்களிடம் கூறுவது கூடுமா?

பதில் : இறந்தவரை காட்டி இவருக்கு ஹலால் சொல்லிவிடுங்கள் எனக் கூறுவது சுன்னத்தான காரியமன்று மாறாக இது மார்க்கம் அனுமதிக்காத பித்அத்தை சார்ந்த செயலாகும். காரணம், மனிதர்களுடன் கொடுக்கல் வாங்கல் தொடர்பு இல்லாத ஒருவரை பற்றி எவருக்கும் தீய எண்ணம் ஏதும் இருக்காது. கொடுக்கல் வாங்கல் தொடர்பு உள்ளவராக இருந்து தான் வழங்கவேண்டியதை வழங்கி இருந்தால் அவர் பற்றி எந்த எண்ணமும் இருக்காது. வழங்காவிட்டால் கடன் கொடுத்தவர் அதனை ஹலாலாக ஆக்கலாம், ஆக்காமலும் இருக்கலாம். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : மனிதர்களின் பொருளை பெற்றவர் அதனை திருப்பி வழங்கும் எண்ணத்தில் பெற்றால் (அவர் அதனை திருப்பி வழங்காது இறந்துவிட்டால் மறுமையில்) அல்லாஹ் அதனை வழங்கிடுவான். திருப்பி வழங்கும் எண்ணம் இன்றி எடுத்தால் அல்லாஹ் அதனை அழித்திடுவான். (நூல் : புகாரி, முஸ்லிம்)

49. கேள்வி : அடக்கஸ்தலங்களை தரிசிக்கும் முறைகள் என்ன?

பதில் : அடக்கஸ்தலங்களை தரிசிக்கச் செல்லும் மனிதன் அதன் மூலம் தான் படிப்பினை பெறுவதையும் நன்மையடைவதையும் நோக்கமாகக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு செய்வதே நபி (ஸல் ) அவர்களின் கட்டளைக்கு கட்டுப்படுவதாகும். ஏனெனில் அன்னார் கூறியதாவது: "கப்ருகளை தரிசியுங்கள் அது மறுமையை உங்களுக்கு ஞாபகமூட்டும்.". (நூல் : புகாரி)

அடக்கஸ்தலத்தை தரிசிப்பவரின் நோக்கம் அதன் மூலம் பரகத் பெறவேண்டுமென்றோ, அல்லது கப்ராளிகளிடம் பிரார்த்தனை செய்யவேண்டுமென்றோ இருக்குமானால் ( இத்தகைய முறை வேறு சில நாடுகளில் இருந்தபோதிலும் எங்களிடம் (சவுதியில்) இல்லை. அனைத்து புகழும் அல்லாஹ்விற்கே. ) இத்தகைய முறையில் அடக்கஸ்தலங்களை தரிசிக்கச் செல்வது சிலபோது பித்அத்தாகவோ அல்லது இணைவைப்பாகவோ அமைந்துவிடும். ஆகவே கப்ருகளை தரிசிப்பதை இரண்டுவகையாக பிரிக்கலாம்.

ஒன்று : குறிப்பிட்ட ஒரு மனிதனின் அடக்கஸ்தலத்தை நாடி செல்லல். இந்நிலையில் அவர் கப்ரிடம் நின்று அதற்காக பிரார்த்தனை புரிவார். நபி (ஸல்) அவர்கள் தனது தாயாரின் கப்ரை தரிசிக்கச் சென்றதை இதற்கு உதாரணமாகக் கூறலாம். அன்னார் தன் தாயாருக்காக பாவ மன்னிப்புக்கோர அனுமதிகோரியபோது அல்லாஹ் அதற்கு அனுமதி வழங்கவில்லை, அவரின் கப்ரை தரிசிப்பதற்கு அனுமதிகோரியபோது அனுமதி வழங்கினான். நபித்தோழர்களில் ஒரு குழுவினருடன் சென்று நபி (ஸல்) அவர்கள் தனது தாயின் கப்ரை தரிசித்துவிட்டு வந்தார்கள். (நூல் : புகாரி, முஸ்லிம்)

இரண்டு : எவரையும் குறித்து செல்லாது பொதுவாக அடக்கஸ்தலத்தை தரிசிக்கும் நோக்கில் செல்லல். இந்நிலையில் கப்ருகளுக்கு முன்னால் நின்று நபி (ஸல்)

அவர்கள் செய்ததுபோன்று ஸலாம் கூறவேண்டும். நபி (ஸல்) அவர்கள் பகீ.: எனும் அடக்கஸ்தலத்தை தரிசித்தால் பின்வருமாறு பிரார்த்திப்பார்கள்.

السَّلَامُ عَلَيْكُمْ دَارَ قَوْمٍ مُؤْمِنِينَ وَإِنَّا إِنْ شَاءَ اللَّهُ بِكُمْ لَاحِقُون يَرْحَمُ اللَّهُ الْمُسْتَقْدِمِينَ مِنَّا وَمِنْكُمْ وَالْمُسْتَأْخِرِينَ نَسْأَلُ اللَّهَ لَنَا وَلَكُمْ الْعَافِيَةَ اللَّهُمَّ لَا تَحْرِمْنَا أَجْرَهُم وَلَا تَفْتِنَّا بَعْدَهُم وَاغْفِرْ لَنَا وَلَهُمْ

"அஸ்ஸலாமு அலைக்கும் தார கவ்மிம் மு.:மினீன் வஇன்னா இன்ஷாஅல்லாஹ் பிகும் லாஹிகூன். யர்ஹமுல்லாஹு ல் முஸ்தக்திமீன மின்னா வமின்கும் வல்முஸ்த.:கிரீன். நஸ்அலுல்லாஹ லனா வலகுமுல் ஆ.:பியா. அல்லாஹு ம்ம லா த.:ரிம்னா அஜரஹு ம் வலா த.:ப்தின்னா ப.:தஹு ம் வக்.:பிர்லனா வலஹு ம்

(பொருள் : விசுவாசிகளே! அல்லாஹ்வின் சாந்தி உங்கள் மீது உண்டாகட்டுமாக! நிச்சயம் நாங்களும் உங்களுடன் வந்து சேர்ந்திடுவோம், எங்களிலும் உங்களிலும் முன்பு மரணித்தோர், பின்பு மரணிக்கவிருப்போர் எல்லோருக்கும் அல்லாஹ் அருள்புரிவானாக! அல்லாஹ் எமக்கும் உங்களுக்கும் நல்ல ஆரோக்கியத்தினை வழங்குவானாக! யாஅல்லாஹ்! அவர்களின் நலவை எமக்கு தடுத்துவிடாதே! அவர்களுக்கு பிறகு எம்மை சோதித்துவிடாதே! மேலும் எம்மையும் அவர்களையும் மன்னித்துவிடு.)

50. கேள்வி : மய்யித்திற்கு ஸலாம் கூறும்போது கிப்லாவை முன்னோக்கவேண்டுமா?

பதில் : மய்யித்தை முன்னோக்கி ஸலாம் கூறிவிட்டு அதற்காக நின்றவராக துஆ செய்யவேண்டும். கிப்லா திசையை முன்னோக்கத் தேவையில்லை.

51. கேள்வி : அடக்கஸ்தலத்திற்குள் நுழைந்த மனிதர் மாத்திரம் மரணித்தவர்களுக்கு ஸலாம் கூறுவது சுன்னத்தான காரியமா? அல்லது அதனை கடந்து பாதையில் செல்லும்போதும் ஸலாம் கூறுவது சுன்னத்தாகுமா?

பதில் : கப்ரை தரிசித்தாலும் அல்லது அதை கடந்து சென்றாலும் நான் ஏற்கனவே கூறிய துஆவைக் கொண்டு துஆ கேட்பது சுன்னத்தான காரியமென மார்க்க சட்ட அறிஞர்கள் கூறியுள்ளனர்.

52. கேள்வி : இத்தா இருக்கும் பெண் அக்காலத்தில் செய்யக்கூடாத காரியங்கள் எவை?

பதில் : இத்தா காலத்தில் இருக்கும் பெண் செய்யக் கூடாத காரியங்கள் பின்வருமாறு :

1. தேவையின்றி அவளின் வீட்டை விட்டும் வெளியே செல்லக்கூடாது. நோயாளியாக இருந்து வைத்திய சாலைக்கு சென்றுவரும் தேவை இருப்பின் பகலில் சென்றுவருவது ஆகும். அவ்வீட்டில் இருக்கமுடியாத நிலை உருவானால் அப்போதும் வெளியே செல்வது கூடும். வீடு இடிந்து விழும் நிலை அல்லது அது தீப்பற்றி எரியும் நிலை ஆகியவற்றை இதற்கு உதாரணமாக கூறலாம். பகலில் தேவைக்காகவும் இரவில் அவசிய நிலையில் மாத்திரமும் இத்தா இருக்கும் பெண் வெளியே செல்லலாம் என அறிஞர்கள் கூறுகின்றனர்.
2. மணம் பூசக் கூடாது : இத்தா இருக்கும் பெண் மாதவிடாயிலிருந்து சுத்தமாகும் நிலையைத் தவிர ஏனைய நேரங்களில் மணம் பூசுவதை நபி (ஸல்)

அவர்கள் தடை செய்துள்ளார்கள். மாதவிடாயின் வாடையை போக்கும் வண்ணம் அது முடிவடைந்ததும் அவள் மணம் பூசிக் கொள்ளலாம்.

3. அலங்காரமாக கருதப்படக்கூடிய அழகிய ஆடையை அவள் அணியக்கூடாது. ஏனெனில் அவ்வாறு அணிவதை நபி (ஸல்)அவர்கள் தடை செய்துள்ளார்கள். அலங்காரப்படுத்தும் விதமாக அன்றி வீட்டில் இருக்கும் போது அணிவது போன்ற சாதாரண ஆடையையே அவள் அணியவேண்டும்.

4. கண்ணில் சுருமா இடக்கூடாது. ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் (இத்தா இருக்கும் பெண்ணுக்கு ) அதை தடை செய்துள்ளார்கள். அவசியமானால் அதன் நிறம் தெரியாத வண்ணம் இரவில் போட்டுக் கொள்ளலாம். ஆயினும் பகல் வேலையில் அதை துடைத்து விடவேண்டும்.

5. நகை அணியக்கூடாது. அழகிய ஆடையையே அணியக்

கூடாது எனத் தடுக்கப்படும்போது நகை அணிவது எம்மாத்திரம்.

இத்தாவிலுள்ள பெண் ஆண்களுடன் (தேவை இருப்பின்) நேரடியாக பேசுவதோ அல்லது தொலைபேசியில் பேசுவதோ அல்லது வீட்டில் நுழைய அனுமதியுள்ள ஒருவருக்கு அனுமதி வழங்குவதோ, இரவுபகல் வேளைகளில் வீட்டின் மொட்டை மாடிக்கு செல்வதோ தடுக்கப்படவில்லை. சில பாமரர்கள் நினைப்பது போன்று வெள்ளிக்கிழமை தோறும் அவள் குளிக்கவேண்டுமென்றோ அல்லது வாரத்திற்கொருமுறை தலை முடியை அவிழ்த்து விட வேண்டுமென்றோ சட்டம் ஏதும் இல்லை. இத்தா முடிவடைந்துவிட்டால் அவள் எதையேனும் எடுத்துச் சென்று முதலில் சந்திப்பவருக்கு

தர்மமாக வழங்கவேண்டும் (எனக் கூறப்படுவதும்) அவசியமற்ற, மார்க்கத்தில் இல்லாத பித்அத்தான காரியமாகும்.

53. கேள்வி : கணவன் இறந்த செய்தி கிடைக்கும் வீட்டிலேயே மனைவி இத்தா இருக்கவேண்டுமா? அல்லது கணவனின் வீட்டில் இத்தா இருக்கவேண்டுமா? மேலும் இருக்கும் நிலையில் கணவன் வீட்டிலிருந்து தன் குடும்பத்தினரிடமோ அல்லது வேறு யாரிடமோ அவள் செல்லலாமா?

பதில் : கணவன் இறந்த பெண்மனி தான் குடியிருந்தவந்த வீட்டில் இத்தா இருப்பது அவசியம். குடும்பத்தினரை சந்திக்க சென்ற வேலையில் கணவன் மரணித்த செய்தி வந்தால் அவள் கணவனுடன் குடியிருக்கும் வீட்டிற்கு திரும்பிச் செல்வது அவசியம். இத்தா இருக்கும் பெண் மீது தடுக்கப்பட்ட ஐந்து அம்சங்களில் அவள் வீட்டை விட்டு வெளியே செல்லக்கூடாது என்பதும் ஒன்று என்பதை ஏற்கனவே நாம் குறிப்பிட்டுள்ளோம்.

54. கேள்வி : பெண் கப்ருகளை தரிசிக்கச் செல்வதன் சட்டத்தினை விரிவாக விளக்கவேண்டுமென மரியாதைக்குரிய உங்களிடம் ஆவலுடன் வேண்டுகிறேன் .

பதில் : கப்ருகளை பெண்கள் தரிசிப்பது ஹராமான (தடுக்கப்பட்ட)காரியம் என்பதுமட்டுமல்லாது பெரும் பாவங்களில் ஒன்றாகவும் உள்ளது. ஏனெனில் கப்ருகளை தரிசிக்கச் செல்லும் பெண்களை நபி (ஸல்) அவர்கள் சபித்துள்ளார்கள். ஆயினும் ஒரு பெண்மணி ஸியாரத் செய்யும் நோக்கமின்றி அடக்கஸ்தலத்தை கடந்து செல்லும் வேளையில் அங்கு நின்று அவர்களுக்காக பிரார்த்தனை

புரிவது குற்றமல்ல. முஸ்லிமில் வந்துள்ள அன்னை ஆயிஷா (ரழி) அவர்களின் ஹதீஸ் இக்கருத்தையே தெரிவிக்கின்றது.

55. கேள்வி : பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் அனுதாபம் தெரிவிப்பதும் அதற்கு பதிலாக மரணித்தவரின் குடும்பத்தினர் நன்றி தெரிவிப்பதும் இன்று பரவியுள்ளது. இதன் சட்டம் என்ன? தடைசெய்யப்பட்ட அறிவித்தல் முறையில் இது அடங்குமா? பத்திரிக்கையில் அனுதாபம் தெரிவிப்பதும் அதற்கு பதில் கூறுவதும் முழுமையாக ஒரு பக்கத்தையே பிடித்துவிடுகிறது. மேலும் இதன் கட்டணமாக பத்தாயிரம் ரியால்களை பத்திரிக்கை வசூலிக்கின்றது, எனவே இக்காரியம் வீண்விரயத்தில் அடங்குமா?

பதில் : இவ்வாறு அறிவித்தல் செய்வதை மார்க்கம் தடைசெய்துள்ளது என்றே நான் கருதுகிறேன். அவ்வாறு இல்லாவிட்டாலும் கேள்வியில் இருப்பது போன்று வீண்விரயமும் பணத்தை பாழாக்கும் நிலையும் இதில் உள்ளது. மரணித்தவரின் குடும்பத்தினர் கவலையுடன் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அனுதாபம் என்பது உண்மையில் வாழ்த்து அல்ல. பாதிக்கப்பட்ட மனிதனை கண்ணுற்றால் அவர் அப்பாதிப்பை தாங்கிக்கொள்ளும் வண்ணம் ஏதும் கூறி அவரை பலப்படுத்துவதே அனுதாபம் தெரிவிப்பதன் நோக்கம். இதற்கே அனுதாபம் கூறல் எனப்படும். முகத்தாட்சணையாகவோ, வாழ்த்தாகவோ கூறப்படும் அம்சமல்ல இது. அனுதாபம் தெரிவித்தல் எதற்கென மக்கள் அறிந்தால் நீர் கூறியதுபோன்று பத்திரிக்கையில் விளம்பரம் செய்யவோ, அல்லது அதற்காக கூட்டம் கூட்டவோ, விருந்து வழங்கவோ அவர்கள் ஏற்பாடு செய்யமாட்டார்கள்.

56. கேள்வி : (தஃஸியா எனும்) அனுதாபம் தெரிவிப்பது பற்றி கூறுகையில் மரணமல்லாத காரியத்திற்கும் அனுதாபம் தெரிவிக்கப்படுவதாக கூறினீர்கள். அப்படியாயின் அது சுன்னத்தாகுமா? அதன் முறை என்ன?

பதில் : பாதிக்கப்பட்டவர் பொறுமையை மேற்கொள்ளும் வண்ணம் அவரை தைரியப்படுத்துவதே தஃஸியா என்பது. இது மரணமல்லாத வேறு காரியத்திலும் இடம் பெறும். தனக்கு சொந்தமான பெருந்தொகையை இழந்து பாதிப்புக்கு உள்ளாவதையோ அல்லது அதுபோன்ற வேறு காரியங்களையோ இதற்கு உதாரணமாக கூறலாம். இத்தகைய மனிதன் பெரும் பாதிப்பிற்கு ஆளாகாமல் இருக்கும் பொருட்டு அவரிடம் சென்று ஆறுதல் கூறி, பொறுமையை கடைபிடிக்கச் செய்யவேண்டும்.

57. கேள்வி : அடக்கஸ்தலங்களை தரிசிப்பதற்கென வெள்ளிக்கிழமையை மற்றும் இரு பெருநாள் தினங்களை தேர்ந்தெடுப்பது கூடுமா?

பதில் : இதற்கு ஆதாரம் எதுவும் கிடையாது. பெருநாள் தினத்தை அடக்கஸ்தலங்களை தரிசிப்பதற்கென தேர்ந்தெடுத்து அதை மார்க்கக் காரியமென கருதுவது மார்க்கத்தில் இல்லாத பித்அத் எனும் பாவமான அம்சமாகும். நபி (ஸல்) அவர்கள் அவ்வாறு செய்ததாக எத்தகைய செய்தியும் இல்லை. யாரேனும் அறிஞர்கள் கூறியிருப்பதாகவும் நான் அறியவில்லை. வெள்ளிக்கிழமையை பொருத்தவரை அத்தினத்தில் கப்ருகளை அவசியம் ஸியாரத் செய்யவேண்டுமென சில அறிஞர்கள் கூறுகின்றனர். ஆயினும் நபி (ஸல்) அவர்களிடமிருந்து அதுவிசயமாக எத்தகைய ஆதாரத்தையும் அவர்கள் வழங்கவில்லை.

58. கேள்வி : நபி (ஸல்) அவர்களின் கப்ரையும் ஏனைய கப்ரையும் பெண்கள் தரிசிப்பதில் உள்ள வித்தியாசம் என்ன? பெண்கள் கப்ருகளை தரிசிப்பது கூடாது எனும் தடை பொதுவானதா? அல்லது நபி (ஸல்) அவர்களின் கப்ருக்கு மட்டும் விதிவிலக்குண்டா?

பதில் : பெண்கள் கப்ருகளை தரிசிக்கக்கூடாது எனும் தடையில் நபி (ஸல்) அவர்களின் கப்ருக்கு மாத்திரம் விதிவிலக்கு உண்டு என்று கூற ஆதாரம் ஏதும் இல்லை. நபி (ஸல்) அவர்களின் கப்ரை பெண்கள் தரிசிப்பது ஏனைய கப்ரை தரிசிப்பது போன்றதுதான் என்பதே எமது நிலை. தொழுகையிலும் வேறு நேரத்திலும் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலாம் கூறுவது பெண்களுக்கு போதுமானதாகும். எங்கிருந்து அவர்கள் ஸலாம் கூறினாலும் அது நபியவர்களை சென்றடையும்.

59. கேள்வி : கப்ருகள் மீது எழுதுவதோ அல்லது நிறத்தால் அடையாளம் இடுவதோ கூடுமா?

பதில் : கப்ருகளுக்கு நிறம் அடிப்பது அதற்கு சுண்ணாம்பு பூசும் காரியத்தை சார்ந்ததாகும். நபி (ஸல்) அவர்கள் கப்ருகள் மீது சுண்ணாம்பு பூசுவதை தடை செய்துள்ளார்கள். (நூல் முஸ்லிம், அறிவிப்பாளர் ஜாபிர் (ரழி) அவர்கள்) நிறம் பூசும் இக்காரியம் மனிதர்கள் தங்களுக்கிடையில் பெருமை பாராட்டிக் கொள்ளும் வழியாகி, பிறகு கப்ருகள் பெருமை அடிக்கும் இடமாக ஆகிவிடும். ஆகவே இதை கண்டிப்பாக தவிர்க்கவேண்டும்.

கப்ரின் மீது எழுதுவதை நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள். எத்தகைய புகழும் இன்றி வெறும் அறிவித்தலாக எழுதப்படுபவற்றை ஆகுமென சில அறிஞர்க்ள

கூறியுள்ளனர். கப்ருகள் மீது எழுதுவது தடை எனக் கூறப்பட்டுள்ள ஹதீஸில் கப்ரின் மீது கட்டுதல், அதற்கு சுண்ணாம்பு பூசுதல் ஆகியவையும் இணைத்து கூறப்பட்டுள்ளதால் கப்ராளியை பெருமை படுத்தும் வார்த்தைகளை எழுதுவதே தடை என்பது அவ்வறிஞர்களின் வாதமாகும்.

60. கேள்வி : பிரபலமான நல்லவரோ, அறிவாளியோ இறந்தால் அவரின் கப்ரை பலர் மார்க்க வழியில் தரிசிக்கின்றனர். ஆனால் மார்கம் பயிலும் மாணவர்கள் இது இணைவைத்தலை (ஷிர்க்கை) ஏற்படுத்திவிடும் என அஞ்சி தடை செய்கின்றனர். இது பற்றி தாங்கள் கருத்து என்ன?

பதில் : அம்மாணவர்களின் கருத்தே எனது கருத்தும். அதாவது அறிவாளிகள் வணக்கசாலிகள் ஆகியோரின் கப்ருகளை அதிகமானோர் தரிசிக்கச் செல்வது அவர்களிடம் பக்தியை தோற்றுவித்து அல்லாஹ்விற்கு இணையாக ஆக்கிவிடும் நிலையை சிலநேரம் ஏற்படுத்திவிடலாம். ஆகவே அவர்களின் கப்ருகளை தரிசிக்கச் செல்லாது அவர்களுக்காக துஆ செய்வது அவசியம். துஆவை அல்லாஹ் ஏற்றுவிட்டால் போதும் அது அவர்களுக்கு பலன் தரும். மனிதன் கப்ரு அருகில் சென்று துஆ கேட்பதும், வீடு, பள்ளிவாயில் ஆகியவற்றில் இருந்து துஆ கேட்பதும் சமமானதே. அனைத்துமே அல்லாஹ்விடம் சென்றடையும். கப்ருக்கு அடிக்கடி சென்றுவரவேண்டிய தேவை இல்லை. குறிப்பாக நீண்ட காலமாகி விட்டால் அம்மாணவர்களின் எச்சரிக்கை நடைபெற சாத்தியம் உள்ளது.

61. கேள்வி : "மரணித்தவர்களை ஏசாதீர்கள் அவர்கள் தங்களின் செயல்கள் பக்கமே சென்றுவிட்டார்கள்" என நம்பகமான ஹதீஸ் புகாரியில் வந்திருந்தும் கூட, தீயவர்

ஒருவர் மரணிக்கின்ற வேளையில் மக்கள் அவரின் தீமையை எடுத்து கூறுகின்றனர். இத்தகையோர் மேற்கண்ட எச்சரிக்கைக்கு ஆளாகுவார்களா?

பதில் : அவர்களின் நோக்கம் மரணித்தவரை ஏசுவதாக (மாத்திரம்) இருந்தால் அது தவறு. மரணித்தவரின் செயலையும் அவர் சென்ற வழியையும் எச்சரிப்பது நோக்கமாயின் அதில் குற்றமில்லை, ஏனெனில் அதன் மூலம் நன்மையே நாடப்பட்டுள்ளது.

62. கேள்வி : கப்ரில் மய்யத்திற்காக போர்வை விரிப்பதன் சட்டம் என்ன? நபி (ஸல்) அவர்களுக்கு சிவப்பு போர்வை ஒன்று விரிக்கப்பட்டதாக முஸ்லிம் எனும் ஹதீஸ் நூலில் வந்துள்ள செய்தியை இதற்கு ஆதாரமாக கொள்ளலாமா?

பதில் : கப்ரில் போர்வை போர்த்துவதில் குற்றமேதும் இல்லை என சில அறிஞர்கள் கூறியுள்ளனர். ஆயினும் நான் இதனை சரி எனக் கருதவில்லை, காரணம் சஹாபாக்களில் எவருமே இவ்வாறு செய்ததாக அறிவிக்கப்படவில்லை. நபி (ஸல்) அவர்களுக்குரிய தனிப்பட்ட அம்சங்களில் ஒன்றாக இது இருக்கலாம். இக்காரியம் அனுமதிக்கப்பட்டால் போட்டிப்போட்டுக்கொண்டு ஒவ்வொரு மனிதரும் தனது உறவினரின் மய்யித்திற்கு மற்றவரைவிட அழகிய போர்வை போர்த்திட வேண்டுமென விரும்புவார். பிறகு கப்ருகளும் மக்கள் ஒருவருக்கொருவர் பெருமையடிக்கும் இடமாக மாறிவிடும். தீமையை ஏற்படுத்தும் காரணிகளை அவசியம் தடுத்திடவேண்டும்.

63. கேள்வி : ஷக்ரான் என்பவரின் கப்ரில் போர்வை போர்த்தியதை சஹாபாக்கள் மறுத்துள்ளார்கள் என்பதற்கு ஆதாரம் ஏதும் உண்டா? அப்போர்வையை சஹாபாக்கள்

நீக்கிவிட்டனர் எனும் செய்தியின் அறிவிப்பாளர் வரிசை நம்பகமானதா?

பதில் : இது பற்றி நான் எதனையும் அறியவில்லை.

64. கேள்வி : இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்கள் அறிவிக்கும் செய்தி ஒன்றில் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு முஸ்லிமின் உயிர் உடலைவிட்டு வெளியேறினால் இரண்டு மலக்குகள் அதனை எடுத்துக்கொண்டு வானத்திற்கு உயர்ந்து செல்கின்றனர். “ ஹம்மாத் என்பவர் கூறுகிறார்: அதன் நறுமணம் பற்றி கூறுகையில் கஸ்தூரி வாடையை கூறினார்கள்” வானத்திலுள்ள மலக்குகள் பூமியில் இருந்து வரும் சிறப்பான ஆன்மா இது. உன்மீதும் நீ குடிகொண்டிருந்த உடல் மீதும் அல்லாஹ் அருள் புரிவானாக! எனக் கூறுவர். பின்பு அது இறைவனிடம் எடுத்துச் செல்லப்படும். அவன் இதனை இறுதித் தவணை வரை எடுத்துச் செல்லுங்கள் என்று கூறுவான். இவ்வாறே காஃபிரான மனிதனுக்கும் அவனை இறுதித் தவணை வரை எடுத்துச் செல்லுங்கள் என்று கூறுவான். (கேள்வி யாதெனில்) இறுதித் தவணை என்பதன் மூலம் இங்கு நாடப்பட்டது எது?

பதில் : மறுமை நாள் என்பதே அதன் அர்த்தம்.

65. கேள்வி : இமாம் முஸ்லிம் (ரஹ்) அவர்கள் அறிவிக்கும் செய்தி ஒன்றில் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: “என் தாயாருக்கு மன்னிப்புக் கோருவதற்கு அனுமதி கேட்டேன் எனக்கு அவன் அனுமதி வழங்கவில்லை”. நபி (ஸல்)

அவர்களின் தாயார் நரகவாசி என்பது இந்த ஹதீஸின் அர்த்தமா?

பதில் : ஆம். இந்த ஹதீஸ் நபியவர்களின் தாயார் இணை வைப்பவர்களில் ஒருவராக இருந்துள்ளார் என்பதை அறிவிக்கின்றது. அல்லாஹு த்தஆலா கூறுகின்றான் : முஷ்ரிக்குகள் (இணைவைப்பவர்கள்) தம் நெருங்கிய உறவினர்களாக இருப்பினும், நிச்சயமாக அவர்கள் நரகவாசிகள் என்று தெளிவாக்கப்பட்ட பின் அவர்களுக்காக மன்னிப்புக்கோருவது நபிக்கும், ஈமான் கொண்டவர்களுக்கும் தகுதியானதல்ல. (9 : 113) மேலும் கூறுகிறான் : எவனொருவன் அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பானோ அவனுக்கு அல்லாஹ் சுவனபதியை நிச்சயமாக ஹறாமாக்கிவிட்டான், மேலும் அவன் ஒதுங்குமிடம் நரகமேயாகும், அக்கிரமக்காரர்களுக்கு உதவிபுரிபவர் எவருமில்லை. (5 : 72)

66. கேள்வி : கப்ருகளுக்கிடையில் செருப்புடன் நடப்பதன் சட்டம் என்ன? செருப்பணிவதை தடுக்கும் பின்வரும் ஹதீஸ் ஆதாரமானதா? "ஸிப்த் பாதரட்சை அணிந்தவரே! உமது செருப்புகளை கழட்டிவிடுவீராக!" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள.

பதில் : கப்ருகளுக்கிடையில் செருப்புடன் நடப்பது வெறுக்கத்தக்க அம்சமென அறிஞர்கள் கூறுகின்றனர். மேற்கூறிய ஹதீஸையும் இதற்கு ஆதாரமாக கூறுகின்றனர். ஆயினும் கடுமையான வெப்பம், முள் போன்றவை நிலத்தில் இருக்குமானால் செருப்புடன் நடப்பதில் குற்றமில்லை எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

67. கேள்வி : முஹம்மத் இப்னு கைஸ் எனும் நபித்தோழர் அறிவிக்கும் ஹதீஸில், அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் அல்லாஹ்வின் தூதரே! மரணித்தவர்களுக்கு நான் எப்படி (ஸலாம்) கூறவேண்டும் எனக் கேட்டபோது, "முஸ்லிம்களான முஃமின்களான கப்ராளிகளே! அல்லாஹ்வின் சாந்தி உங்கள் மீது உண்டாகட்டுமாக! எங்களில் முந்திவிட்டோர், பிந்திசெல்லவிருப்போர் அனைவர் மீதும் அல்லாஹ் அருள் பாலிப்பானாக! நிச்சயம் நாமும் உங்களுடன் வந்துசேர்ந்திடுவோம்." எனக் கூறுமாறு சொன்னார்கள். (நூல் : முஸ்லிம் ) மேலும் அன்னை உம்மு அதிய்யா அவர்கள் அறிவிக்கக்கூடிய ஹதீஸ் ஒன்றில் "ஜனாஸாக்களை பின்தொடர்ந்து செல்வதை விட்டும் நாம் தடுக்கப்பட்டோம், ஆனால் அது எங்களுக்கு கண்டிப்பான தடையாக ஆக்கப்படவில்லை." எனக் கூறியுள்ளார்கள். (நூல் : புகாரி, முஸ்லிம்) மேற்கூறப்பட்ட இரண்டு ஹதீஸ்களும் இன்னும் ஏனைய ஹதீஸ்களும் பெண்கள் தடை செய்யப்பட்ட காரியங்களை செய்யாதிருப்பின் கப்ருகளை தரிசிப்பது ஆகும் என்பதை தெளிவாக அறிவிக்கவில்லையா? அவ்வாறில்லையெனில் முஹம்மத் இப்னு கைஸின் ஹதீஸிற்கு நீங்கள் தரும் விளக்கம் யாது?

பதில் : ஏற்கனவே நாம் கூறிய விடையொன்றில் இச்சட்டத்தினை தெளிவுபடுத்தி, ஆயிஷா (ரழி) அவர்களின் ஹதீஸையும் குறிப்பிட்டோம். கப்ருகளை தரிசிப்பதற்கென பெண்ணொருத்தி சென்றால் அது பெரும் பாவங்களில் ஒன்று என்பதையே நபிவழி கூறுகின்றது. தரிசிக்கும் நோக்கமின்றி செல்லும் வழியில் இருக்கும் கப்ருகளிடம் நின்று ஸலாம் கூறிவிட்டு செல்வது குற்றமல்ல. ஏனைய ஹதீஸ்களுடன் பொருந்தக்கூடியதாகவும் முரண்பாடற்றதாகவும் அமையும் பொருட்டு ஆயிஷா (ரழி)

அவர்களின் ஹதீஸுக்கு இவ்வாறே விளக்கம் அளிக்க வேண்டும். அன்னை உம்மு அதிய்யா (ரழி) அவர்களின் ஹதீஸை பொருத்தவரை அனேக அறிஞர்கள் அன்னை அவர்கள் அறிவித்த செய்தியையே கருத்தில் கொள்ளவேண்டும் என்கின்றனர். "அது எங்களுக்கு கண்டிப்பான தடையாக ஆக்கப்படவில்லை." எனும் அன்னாரின் கூற்று அவர்கள் புரிந்தவிதம் (அது நபி (ஸல்) அவர்களின் கூற்றல்ல) சில வேளை நபியவர்களின் நோக்கமும் அதுவாக இருக்கலாம். ஏனெனில் ஜனாஸாவை பின்தொடர்வது என்பது ஒரு அம்சம், கப்ரை தரிசிப்பது என்பது வேறு ஒரு அம்சம். ஜனாஸாவை பின்தொடரும் விசயத்தில் ஆண்களும் அதனுடன் இருப்பதனால் தடைசெய்யப்பட்ட ஏதும் நடைபெற சாத்தியமற்றது காரணம் ஜனாஸாவுடன் ஆண்கள் இருக்கின்றனர். மேலும் பெண்கள் தடைசெய்யப்பட்டதை செய்ய நினைத்தாலும் ஆண்கள் அதை தடுத்துவிடுவார்கள். ஆனால் கப்ருகளை தரிசிக்கும் காரியம் அவ்வாறல்ல.

68. கேள்வி : மரணத்தருவாயில் இருப்பவர்களுக்கு லாஇலாஹ இல்லல்லாஹ் என்று சொல்லிக்கொடுங்கள்! (அறிவிப்பவர் : அபூஸஈத் அல்குத்ரி (ரழி) நூல் :முஸ்லிம்) எனும் ஹதீஸ் கடமையைக் குறிக்கவில்லை என்பதை தெரிவிக்கும் வண்ணம் வேறு ஏதும் செய்திகள் உண்டா?

பதில் : சஹாபாக்களின் நடைமுறைதான் இக்காரியம் கடமையில்லை என்பதை தெரிவிக்கின்றது. ஏனெனில் அவர்கள் மரணத்தருவாயில் இருக்கும் எல்லோருக்கும் கலிமாவை சொல்லிக் கொடுப்பவர்களாக இருக்கவில்லை.

69. கேள்வி : ரூஹ், நஃப்ஸ் எனும் இரு வார்த்தைகளும் ஒரே அர்த்தத்தில் பின்வரும் ஹதீஸ்களில் இடம்பெற்றுள்ளது.

1. மனிதன் மரணித்துவிட்டால் அவன் பார்வை மேலே செல்வதை நீங்கள் பார்க்கவில்லையா என நபி (ஸல்) அவர்கள் கூறியபோது, நபித்தோழர்கள் ஆம் என பதிலுரைத்தனர் அதற்கு அன்னார் அவனது பார்வை (நஃப்ஸ் எனும்) உயிர் போகும் திசையை தொடர்கிறது எனக் கூறினார்கள். (அறிவிப்பவர் : அபூஹுரைரா (ரழி) நூல் : முஸ்லிம்)

2. (ரூஹ் எனும்) உயிர் கைப்பற்றப்பட்டால் பார்வை அதனைத் தொடர்கிறது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர் : உம்மு ஸலமா (ரழி) நூல் :முஸ்லிம்)

கேள்வி : ரூஹ், நஃப்ஸ் எனும் இரு வார்த்தைகளும் ஒரே பொருளை குறிக்கக்கூடியதா? என்பதை எமக்கு தெளிவுபடுத்துங்கள்.

பதில் : ஆம் ரூஹ், நஃப்ஸ் எனும் இரு வார்த்தைகளும் (உயிர் எனும்) ஒரே பொருளை குறிக்கக்கூடியதுதான். அல்லாஹ் கூறுகிறான் : அல்லாஹ், உயிர்களை அவை மரணிக்கும் போதும், மரணிக்காதவற்றை அவற்றின் நித்திரையிலும் கைப்பற்றி, பின்பு எதன் மீது மரணத்தை விதித்துவிட்டானோ அதை(த் தன்னிடத்தில்) நிறுத்திக் கொள்கிறான். (39 : 42)

70. கேள்வி : அபூ மூஸா அல்அஷ்அரி (ரழி) அவர்கள் வாயிலாக இமாம் முஸ்லிம் (ரஹ்) அறிவிக்கும் ஹதீஸ் ஒன்றில் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளதாவது "மரணித்தவருக்காக ஓலமிட்டு அழும் பெண்மணி அதற்காக

பாவமன்னிப்பு கோராவிட்டால் மறுமையில் தாரினால் தயாரிக்கப்பட்ட சட்டையும், ஜிர்பினால் ஆன திர்ஹையும் அணிவிக்கப்பட்ட நிலையில் எழுப்பப்படுவாள் என வந்துள்ளது. கேள்வி ஜிர்பினால் ஆன திர்ஹ் எனும் வார்த்தையின் அர்த்தம் என்ன?

பதில் : அதன் அர்த்தம் தோலால் ஆன கேடயம் என்பதாகும். அல்லாஹ் நம்மை காப்பானாக! நரக வேதனையினால் அதிகம் அவதியுறும் பொருட்டு அதை அவர் அணியநேரிடும்.

# பொருளடக்கம்

1- இறந்தவருக்காக சூரா யாஸீன் ஓதுதல்.................. 1
2- மரணச் செய்தி அறிவித்தல்........................ ...... 2
3- இறந்தவரை குளிப்பாட்டும் முறை.............. ...... 3
4- இறந்தவருக்காக தொழும் முறை................. ... 5
5- அடக்கம் செய்வதை பிற்படுத்தல் ............ 6
6 வெளியூர்களில் மரணித்தோருக்காக தொழுதல்...... 7
7- இறந்தவருக்காக தொழுகை நடாத்த தகுதியானவர் 8
8- பல ஜனாஸாக்களுக்கு தொழுகை நடாத்தும் போது அறிஞர்களின் ஜனாஸாக்களை......................... 8
9- ஜனாஸாத் தொழுகையில் இமாம் நிற்குமிடம்......... 9
10 பல ஜனாஸாக்களுக்க ஒரே நேரத்தில் தொழுதல் 9
11 ஒரு முறை தொழுவதா? பல முறைகள்தொழுவதா? 10
12 ஜனாஸாவிற்கு தொழுவோர் அதிகமாயிருப்பதன் சிறப்பு 10
13 ஃபாத்திஹாவிற்கு பிறகு ஓதுதல் .................... 10
14 சிறு குழந்தைக்காக துஆ செய்யும் முறை 11
15 ஜனாஸாத் தொழுகையில் சூரா ஃபாத்திஹா 11
16 தக்பீர்கள் தவறிவிட்டால்.............................. 12
17 ஜனாஸாத் தொழ தடை செய்யப்பட்ட நேரங்கள் 12
18 ஜனாஸாவிற்காக எழுந்து நிற்றல்.......................13
19 ஜனாஸாவின் வீட்டார் இமாமின் வலதில் ........... 14
20 சிசுவிற்காக தொழுகை நடாத்தல்................. 20
21 ஜனாஸாவின் தலைப்பகுதியை இமாமின் வலப்பக்கத்தில் வைக்கவேண்டுமா?................ ..21
22 ஜனாஸாவிற்காக அதை அடக்குமிடத்தில் தொழுதல் 16
23 ஜனாஸாவை அடக்கிய பிறகு தொழுதல்........... 17
24 கடமையான தொழுகையை ஜனாஸாவிற்காக..........18

25 தொழாத மனிதனுக்கு ஜனாஸாத் தொழுதல்......... 18
26 ஜனாஸாத் தொழுகையில் நிபந்தனையுடன்
துஆ கேட்டல் .................................. 19
27 ஜனாஸாக்களை புஜங்கள் மீது சுமத்தல்.......... ... 20
28 தர்பீஃ என்பதன் அர்த்தம் என்ன?.............. .. 21
29 ஜனாஸாவை பின் தொடர்ந்தவர் அமரும் நேரம்...... 22
30 அடக்கம் செய்யாது பிற்படுத்தல்....................... 22
31 ஜனாஸாவை குழியில் வைக்கும் முறை.............. 22
32 பெண் ஜனாஸாவை அடக்கும்போது மறைத்தல்..... ... 23
33 அடக்கும் சமயத்தில் சப்தமிட்டு பேசுதல்........... 23
34 அடக்கும் சமயத்தில் உபதேசம் செய்தல்........... 23
35 அடக்கஸ்தலங்களில் நுழையும் முறை ............ ... 24
36 அடக்கும் போது ஓதும் துஆ...................... 25
37 தஃஸியா கூறும் முறை.......................... ... 25
38 தஃஸியா கூறும் போது முஸாஃபஹா செய்தல்...... 26
39 தஃஸியா கூறும் நேரம்.......................... 27
40 அடக்கம் செய்யுமுன் தஃஸியா கூறல்.............. ...27
41 தஃஸியா கூற இறந்தவரின் வீடு செல்லல்.......... ... 28
42 ஜனாஸாவை எடுத்துசெல்லும்போது.............. ...29
43 மய்யித்திற்கு மூன்று மண்பிடிகள் போடுதல்......... 29
44 தல்கீன் ஓதுதல்................................ 29
45 மய்யித்திற்கு சாட்சி கூறுதல்...................... ... 29
46 கப்ரின் மீது மரப்பட்டையை வைத்தல்.............. . 30
47 ஜனாஸாத் தொழுகையை அவசரமாக நிறைவேற்றல்... 32
48 மய்யித்தின் கடன்களுக்கு ஹலால் சொல்லுமாறு
வேண்டுதல்............................................32

49 ஜியாரத் செய்யும் முறை.....................................33
50 மய்யித்திற்கு ஸலாம் கூறும் போது கிப்லாவை..........35
51 மய்யவாடியை கடந்து செல்பவர் ஸலாம் கூறல் 35
52 இத்தா இருக்கும் பெண் கடைபிடிக்கவேண்டியவை 35
53 இத்தா இருக்கவேண்டிய இடம்............................37
54 பெண்கள் ஜியாரத் செய்யச் செல்லல்.....................38
55 பத்திரிக்கைகளில் அனுதாபம் தெரிவித்தல்.............38
56 மரணமல்லாத காரியத்திற்கு அனுதாபம் தெரிவித்தல் 39
57 வெள்ளிக்கிழமை, பெருநாள் தினங்களில் ஜியாரத்... .39
58 நபி (ஸல்) அவர்களின் கப்ரை பெண்கள்
ஜியாரத் செய்தல்.............................................40
59 கப்ருகள் மீது எழுதுதல்.................................41
60 அறிஞர்களின் கப்ருகளை விசேடமாக ஜியாரத்...... 41
61 மரணித்தவரின் தீமைகளை கூறுதல்.....................42
62 கப்ருகள் மீது போர்வை விரித்தல்......................42
63 ஷக்ரான் என்பவரின் கப்ரின் மீது...................... 43
64 இறுதித் தவணை என்பதன் விளக்கம்.................44
65 நபி (ஸல்) அவர்களின் தாயின் நிலை............... 44
66 கப்ருகளுக்கிடையில் செருப்புடன் நடத்தல்......... 44
67 பெண்கள் கப்ருகளை தரிசித்தல் பற்றி
விமர்சனமும் - விளக்கமும் ...............................45
68 கலிமாவை சொல்லிக்கொடுப்பதன் சட்டம்.........46
69 ரூஹ், நப்ஸ் பற்றிய விபரம்........................ 47
70 ஜிர்ப் எனும் வார்த்தையின் அர்த்தம்............... 48

## يحتوي هذا الكتاب

على جملة من الأحكام المتعلقة بالجنائز مثل
أحكام صلاة الجنازة
أحكام الدفن
أحكام التعزية
أحكام العدة
والتنبيه على بعض البدع الواقعة بتلك الأمور

## இந்நூலில் உள்ளவை

ஜனாஸாத் தொழுகை,
அடக்கம் செய்தல்,
அனுதாபம் தெரிவித்தல்,
இத்தா இருக்கும் முறை
மற்றும் ஜனாஸாவுடன் சம்பந்தப்பட்ட
பித்அத்தான காரியங்கள் என்பவையாகும்.

ردمك: ٤-٨-٩٥٣٩-٩٩٦٠-٩٧٨

المكتب التعاوني للدعوة بالروضة